


தாமரைச்செல்வி
சிறகிழந்த
கிளிகள்

தானா. மருதமுத்து

# சிறகிழந்த கிளிகள்

வெளியீடு
பாக்யா
பதிப்பகம்

## B I B L I O G R A P H Y


● **Title:** Siragizhantha Kiligal ● **Subject:** Collection of Poems
● **Author:** Thánà. Maruthamuthu ● **Copyright:** © Author
● **Published by:** Bakya Pathippagam, 4 A, Star Square, Hatton
● **Layout :** GOD Creative Lab, Colombo 13 ● **Page Size:** 148mm x 210 mm
● **Pages:** (xix+48) 67 ● **ISBN:** 9789551805074
● **First Edition:** 2014, October ● **Price:** Rs.200/-


---

## நூ ல் த ர வு


● **தலைப்பு:** சிறகிழந்த கிளிகள் ● **விடயம்:** கவிதைத் தொகுப்பு
● **ஆசிரியர்:** தானா. மருதமுத்து ● **உரிமை:** ©ஆசிரியருக்கு
● **பதிப்பகம்:** பாக்யா பதிப்பகம், 4A, ஸ்டார் சதுக்கம், ஹட்டன்
● **வடிவமைப்பு:** GOD Creative Lab, Colombo 13, கொழும்பு
● **பக்க அளவு:** 148mm x 210 mm ● **பக்கங்கள்:** (xix+48) 67
● **நியம எண் :** 9789551805074 ● **முதல் பதிப்பு :** 2014, அக்டோபர்
● **விலை:** ரூ. 200/-

# பதிப்புரை

பாக்யா பதிப்பகத்தின் எட்டாவது வெளியீடு இது. பதிப்பக முயற்சிகள் பற்றி அடிக்கடி, அதிகமாகவே பேசியாகிவிட்டது. எனினும் அது தொடர்பாக கிடைக்கப்பெறும் அனுபவங்கள் அவை பற்றி இன்னும் பேசுவதற்கான வாய்ப்புக்களைத் தந்து கொண் டிருக்கின்றன.

தான் இதழியல் கல்லூரி மாணவன் என தன்னை அறிமுகப் படுத்திக்கொண்ட ஒரு மலையக இளைஞன் என்னை அலுவல கத்தில் சந்தித்தார். தன்னுடைய கவிதைகளை நூலுருவாக்கி பதிப்பிக்க வேண்டும் என்பது அவரது அவா. அவரது கையெ ழுத்துப்பிரதியை புரட்டியபடியே “யாருடைய கவிதைகளை எல் லாம் வாசிப்பீர்கள்?” என்றேன்.

சட்டென ஒரு நட்சத்திர சினிமாப் பாடலாசிரியர் பெயரைச் சொன்னார்.

அவர் சொல்லவந்த வேகத்தில் ஒரு பெரும் பட்டியலை எதிர் பார்த்த எனக்கு ஆச்சரியமாகவிருந்தது. ஏனெனில் அமைதியா னார். அதன் பிறகு “சரி இலங்கை கவிஞர்கள் யாரை வாசித் திருக்கிறீர்கள்?” என்றேன்.

அதற்கும் மௌனம்.

நானும் கையெழுத்துப் பிரதியை புரட்டி முடித்தாயிற்று. “மலையகத்தில் இருந்து வந்திருக்கீறீர்கள். மலையகக் கவிஞர் கள் பெயர்கள் சில சொல்லுங்களேன்” என்றேன்.

“மலையகத்துல யாருதான் எழுதுறா..? அதற்கான ஊக்குவிப் புகள் ஒன்றும் அங்கு இல்லையே” என விமர்சனக்கட்டுரையே வாசித்தவர், தானே அதற்காக புறப்பட்டிருப்பவராக தன்னை முன்னிலைப்படுத்துவதை உணர முடிந்தது. அவரது கையெழுத் துப் பிரதியை அவரிடமே கையளித்து,

“அழகாக எழுதியுள்ளீர்கள். இன்னும் பதினைந்து வருடங்கள் கழித்து வாருங்கள் நிச்சயமாக உங்கள் படைப்புக்களை வெளி யிடுவோம்” என வழியனுப்பிவைத்தேன். விருட்டென வெளியேறி விட்டார் இளைஞன்.

கொழும்பு - பம்பலபிட்டியில் எனது அலுவலகத்துக்கு அருகா மையில் ‘கற்பகம்’ உணவகத்தில் உணவருந்திக் கொண்டிருந்த போது எனக்கு பரிமாறிய இளைஞன்,

“நீங்கள் மல்லியப்புசந்தி திலகர்தானே! பத்திரிகைகளில் பார்த் திருக்கிறேன்” என என்னை விசாரித்து தன்னை பதுளைக்கார ராகவும் அந்த உணவகத்தில் வேலை செய்வதாகவும் அறி முகப்படுத்திக் கொண்டார்.

நானும் வழமையாகவே 'ஹோட்டல்களில்' வேலை செய்யும் ஒரு மலையக இளைஞனாக அவரை விசாரித்துக்கொண்டு விடை பெற்றுக் கொண்டேன்.

அதே 'கற்பகத்துக்கு' அருகாமையிலுள்ள 'அததெரண' ஊடக காரியாலயத்தில் செய்திப் பிரிவில் கடமையாற்றும் தம்பி பழனி விஜயகுமார் என்னுடன் தொடர்பில் இருப்பவர். ஒருமுறை ,

"அண்ணா உங்களைச் சந்திக்க வேண்டும் என அலுவலக த்துக்கு வந்தார். கூடவே ஒரு இளைஞனும் வந்திருந்தார்.

"இவர் பெயர் மனோ" என அறிமுகப்படுத்தினார். 'கற்பகத் தில்' நான் சந்தித்தவர் 'மனோ' என்பதை உறுதிப் படுத்திக் கொண்டேன். .

"மனோ கவிதைகள் எழுதுகிறார். நானும் வாசித்துப் பார்த் தேன் நன்றாக இருக்கிறது. அதனை நூலாக்க வேண்டும். அதற்கு உங்கள் ஆலோசனை வேண்டும்" என்றார் விஜயகுமார்.

இதழியல் கல்லூரி மாணவனிடத்தில் கேட்ட அதே கேள்வி யைக் கேட்டேன். மனோவின் பட்டியலில் ஒரு பெயரும் இல்லை.

"எப்படி இந்த ஆர்வம் ?" என்றேன்.

தனது வாழ்க்கை அனுபவங்களை கதைகதையாக சொன் னார் மனோ. மனோவிற்குள் ஒரு நல்ல 'கதை சொல்லி' இருக்கி றான் என்பது புரிந்தது.

"நீங்கள் சிறுகதை எழுதியுள்ளீர்களா?" என்றேன்.

"ஆம்..." என புன்னகைத்தவர் தனது கவிதைகளையே வெளி யிடவேண்டும் என ஆசைபடுவதாகச் சொன்னார். சில ஆலோச னைகளச் சொல்லி. அனுப்பிவைத்தேன். புன்னகையுடன் விடை பெற்றார்.

மீண்டும் மனோவைச் சந்தித்த போது அவரது முயற்சியில் ஒரு பக்குவம் தெரிந்தது. அதேநேரம் முயற்சியினை கைவிடாமை, கற்றுக்கொள்ளும் ஆர்வம் தென்பட்டது. அப் போதும் நான் பதிப்புக்கு தயாராகவில்லை. என்னுடைய காலம் தாழ்த்துதல் மனோவை புடம்போடும் முயற்சியாகவே அமைந் தது.

மறுபடியும் தட்டச்சு செய்யப்பட்ட தன்னுடைய கவிதைக ளுடன் வந்து என்னை ஆச்சரியத்தில் ஆழ்த்தினார் மனோ. ஒரு பல்கலைக்கழக விரிவுரையாளர், ஒரு அரச திணைக்களத்தின் உதவிப்பணிப்பாளர், ஒரு தீவிர இலக்கிய இயங்குதலிலுள்ள கலை இலக்கிய இயக்கத்தின் இலக்கியக் குழு செயலாளர் என மூவரின் அங்கீகாரத்துடன் வந்து நின்றார். அவர்களது உரை களை முன்னுரை, அணிந்துரை, சிறப்புரை என ஒழுங்கமைத்து தன்னுடைய நூலுக்கு அணிசேர்த்திருந்தார்.

அந்த உரைகள் மூன்றும் மனோவின் கவிதைகள் பற்றிய ஆழ, அகல விசாரணைகளை முன்வைக்கின்றன. எனவே பதிப்புரை யில் படைப்பை பற்றி பேசாது படைப்பாளன் பற்றி எழுதலாம் என நினைக்கிறேன்.

மலையக இளைஞர்கள், யுவதிகள் ஒரு பக்கமாக படித்து மேல்நோக்கிப் போய்க்கொண்டிருக்கையில் பாடசாலையில் இருந்து இடைவிலகி கடைத்தெருவிலும் பங்களாக்களிலும் சின்னா பின்னமாகி மீண்டும் தோட்டத் தொழிலாளராக அல்லது உதிரித் தொழிலாளராக உழலும் ஒரு அவலம் நிகழ்ந்து கொண் டிருக்கிறது.

அத்தகைய பாடசாலை இடைவிலகல் வழிவந்த தங்கையா மருதமுத்து எனும் இயற்பெயர் கொண்ட தம்பி மனோ தன்னை வெளிப்படுத்தும் விதம் வித்தியாசமானது. பாடசாலையிலிருந்து இடைவிலகி தலைநகர் கடைகளில் சிப்பந்தியாக வாழ்வை ஆரம்பித்தவர் இளமைப்பருவத்தின் அத்தனை இச்சைகளுக் கும் அகப்பட்டவராக அடிமைப்பட்டவராக விளிம்பு நிலைக்கு சென்று அதுவே வாழ்க்கை என நிலைத்துவிடாமல் தன்னை சுதாகரித்துக் கொண்டு தன்னை உணர்ந்து... தன்னை மீண்டும் முன் னோக்கி நகர்த்தி நிலை நிறுத்திக்கொள்ள... எடுக்கும் முயற் சியே இந்த கவிதை நூலின் வெளிவருகையாக இருக்கிறது என எண்ணுகிறேன்.

தாங்கள் படித்தவர்கள் என எழுந்து நிற்போர் மத்தியில் பாட சாலையில் இடைவிலகி துவண்டு விழுந்து, எழுந்து நிற்கத் துடி க்கும் ஒரு மலையக இளைஞனுக்குக் கைகொடுக்கும் முயற்சியே எமது பதிப்பகத்தின் இந்த வெளியீடு.

மனோ எனும் தானா. மருதமுத்து கடந்து வந்த வாழ்க்கை கசப்பானது. அதனை அவர் சொல்லும் விதம் சுவாரஸ்ய மானது. ஒரு படைப்பாளியாக தன்னை வெளிக்காட்டும் மனோ ஒரு நாள் தன்னுடைய வாழ்க்கை அனுபவங்களை தழுவிய சிறுகதையோ நாவலோ அல்லது சுயசரிதையோ கூட எழுத லாம். அப்போது 'சிறகிழந்த கிளிகள்' எனும் அவரது இந்தப் படைப்பு இன்று வெளிவந்திருக்க வேண்டியதன் நியாயப்பாடு கள் புலப்படும் என எண்ணுகிறேன்.

அதுவரை ஒரு ஹோட்டலில் சிப்பந்தியாக வேலைபார்க்கும் ஒரு உயர்ந்த இலட்சியக்காரனாக மனோவின் கவிதை களைத் தரிசிப்போம்.

வாழ்த்துக்களுடன்

மல்லியப்புசந்தி திலகர்
பதிப்பாளர்
பாக்யா பதிப்பகம் - ஹட்டன்
29.09.2014

# முன்னுரை

உணர்வுகளை எழுதிக்கோர்த்து கற்பனையோடும் கவித்துவத்தோடும் மனக்கிளர்ச்சியை ஏற்படுத்துவது கவிதை. பல வண்ணப் பூக்கள் இணைந்த கதம்ப மாலையாக தொடுத்து வாசிப்போரின் எண்ணங்களை தூண்டுவதே கவிஞனின் பிரதான நோக்கம். தனது மனதில் காணும் உலகம்... தான் காண விரும்பும் உலகம்... சமூகத்திற்குச் சொல்ல விரும்பும் செய்தி என பல இலக்குகளை நோக்கி கவிதைகள் பூக்கின்றன.

நண்பர் தங்கையா மருதமுத்து அவர்களின் 'சிறகிழந்த கிளிகள்' எனும் கவிதைத் தொகுப்பினை வாசிக்கக் கிடைத்தது மிகுந்த ஆர்வத்தோடு இத்தொகுப்பினை தந்து எனது கருத்துகளைப் பதியுமாறு அன்பு உரிமையோடு வேண்டிக்கொண்டார். நண்பர் மலையகத்துச் சூழலிலே வாழ்ந்து வருபவர் மலையக சமூகம் தனது அடிப்படைத் தேவைகளுக்காக ஆண்டாண்டு காலமாய் அல்லாடும் சமூகம், உரிமைகளும் சலுகைகளும் இன்று வரும் நாளை வரும் என ஏங்கி ஏங்கி காலத்தை கரைத்துக் கொண்டிருக்கும் சமூகம்.

இந்தப் பின்னணியிலே பிறந்து வாழ்ந்து வருகின்ற நண்பர் மருதமுத்து தனது எண்ணங்களை எழுத்துருவாக்கி நம்முன் படைக்கின்றார். இவர் தரும் இத்தொகுப்பிலே தனிமனித உணர்வுகள், சமூக அவலங்கள், எதிர்பார்ப்புக்கள், ஏக்கங்கள், ஏமாற்றங்கள், தவிப்புகள், உணர்வுப்போராட்டம், தாயின் மகத்துவம் போன்ற பல விடயங்கள் கவிதைகளுக்கு உள்ளீடாய் அமைந்து நம்மைத் தூண்டுகின்றன .

'கண்ணீரில் கரைந்த பொட்டு' கணவனைக் காணாத ஒரு பெண்ணின் உணர்வுகளை வெளிப்படுத்துகின்றது. காலத்தின் சோகத்தால் சிறை சென்ற கணவன் வருவான் என காத்திருக்கும் பெண்ணின் துயரம் 'தனலான சுவாசத்தில் தாலி உருகும்' என்ற தொடர் நிறைய விடயங்களை உணர்த்துகின்றது. உழைப்புக்காக வெளியூர் சென்ற பெண்ணைப் பற்றியது.

'இறைமனம் என் செய்யும்?' என்ற கவிதை வறுமையின் துன்பம் அதனால் குடும்பம், சமூகம் படுகின்ற அவலங்கள்

வறுமை மேடையில் - தாயின்
மௌன நாடகம்
போதை ஓலத்தில் - தந்தையின்
உக்கிர தாண்டவம்

என்ற வரிகள் சமூக வாழ்வின் ஒரு அம்சத்தை படம் பிடித்துக் காட்டுகின்றன.

'இன்னல் துடைப்பாயோ?' என்ற கவிதையில்

"காற்றுக்கு ஏனடா கவசம்
சாதிக்கத்தானே சரீரம்"

என்று உணர்வுகளுக்கு உரமூட்டுகின்றார். மலையக சமூகத்தின் அவல நிலையை 'தோள் நிறுத்து' என்ற கவிதை விரிந்து சொல்கிறது. சாதி, மதுபாவனை, வறுமை இத்தனைக்கு மத்தியிலும் கல்வி தேவை என்று உறுதி செய்கிறார் நண்பர். மதுவுக்கு அடிமையாக இருக்கும் மலையகம் எறும்புக்கு 'எச்சிலும் சுனாமி தான்' என்பது வித்தியாசமான தொடர்.

'மொழி பேசும் இமைகள்'- கொடுமை செய்யும் மாமி, முதுமை, நோயால் ஓய்ந்தவுடன் மருமகன் உதவும் தன்மையை வெளிப்படுத்தும். 'மரண படுக்கை எனும் மறுவாசல்' என்ற தொடர் கால ஓட்டத்தை வெளிப்படுத்தி நிற்கிறது. அதனால் மனித சுபாவமும் மாறி விடுகிறது. வாழ்வின் ஒவ்வொரு பருவகால அனுபவங்களையும் 'கல்வி' என்ற தொடரில் படிப்பினையாகாச் சாடுகின்றார்.

விதவையின் துன்பம் பற்றிய வரிகள் நம் உணர்வைத் தூண்டுகின்றன. 'ஆன்மீகம் இழந்தோரின் அறைகூவல்', 'பட்ட மரத்துக்குப் பசளை இடமுனைவோர்...' போன்றன புதுமையான சொற்றொடர்கள்.

பெற்றோர் ஆசிரியருக்கு 'உயிர் மூச்சு' சமர்ப்பணமாகின்றது. இவற்றோடு மென்மையான உணர்வை வெளிப்படுத்தும் காதல் வரிகளும் இல்லாமல் இல்லை.

'கலங்கி நில்லாரோ உயிரே', 'பொறுமையுடன் ஒரு நாள்' போன்ற கவிதைகளில் பெண் மனதை வெல்ல விரும்பும் ஏக்கம் தெரிகின்றது. 'மௌனத்தின் கற்சிலையே - இதயத் திருவடியில்...' என்று நண்பர் உருகி நிற்கிறார்.

ஒரு விலைமாது படும் அவல வாழ்க்கையை வரிகளில் விரித்துச் சொல்கிறார் சமூகத்தின் இருட்டான முகத்தை நாம் காண முடிகிறது. 'என்னவர் காதல்' மலையக உழைப்பையும் வாழ்வின் போக்கையும் உணர்த்துகிற வரிகளைக் கொண்டதாகவுள்ளது.

"செருப்பில்லா கால் பார்த்து
சிரிக்குது தார் ரோட்டு
கண்ணாலே கத்தி வச்சு
கவ்வாத்து வெட்டாதே..."

போன்றவை மலையக சூழலை நினைத்து மகிழத்தக்க தொடர்கள். வயலிலே எத்தனை உழைத்தும் வறுமை வாட்டும் துன்பத்தை 'ஒரு வேளை சிரிப்பில்' என்ற கவிதை மூலம் உணர்த்த விரும்புகிறார்.

"வயலே உன் வசந்தத்தை
எம் வாழ்வில் தருவாயோ?
நாலாம் நாள் அறுவடையில்
நல்ல சேதி தருவாயோ...?"

போன்றவை விவசாயி ஒருவனின் மன ஆதங்கத்தை வெளிப் படுத்துகின்றன.

நிறைவாக நண்பர் தங்கையா மருதமுத்துவின் கன்னி முயற் சியாக இத்தொகுப்பு அமைந்துள்ளது. அவரது உணர்வுகளும் சமூகப் பார்வையும் காண விரும்பும் புதிய உலகமும் வார்த்தை களாக வெளிப்பட்டு நிற்கின்றன.

இத்தொகுப்பு அவரது முதல் முயற்சி என்பதால் நமது வாழ் த்துக்களும் பாராட்டுகளும் உரியன. ஆயினும் கவிதைகள், கவித்துவம் பற்றிய ஆழமான நோக்கு தெளிவான வார்த்தைப் பிரயோகங்கள் இன்னும் விசாலமான வாசிப்புடன் மேற்கொள் ளப்படும் முயற்சி என்பன அவரது கவிதைக்கு கருத்துச் செறி வையும் கவித்துவ ஆற்றலையும் வளர்க்கும் என்பது எமது நம்பிக்கை. நண்பரின் கவிதை தொடர்பான ஆர்வம் ஈடுபாடு என்பன இன்னும் உரம் பெற்று பெருகி அவர் பல சாதனை களைப் படைக்க வாழ்த்துகிறோம்

**ம. சண்முகநாதன்**
உதவிப் பணிப்பாளர
இந்து சமய கலாச்சார அலுவல்கள் திணைக்களம்
கொழும்பு 04

# அணிந்துரை

கவிதைகளுக்கான தேவை இன்னமும் தீர்ந்தபாடில்லை. சாதாரண உரைநடையிலிருந்து மேம்பட்ட ஒரு மொழி வடிவத்தைக் கையாளும் தேவை மறுபடி மறுபடி வெவ்வேறு காரணங்களுக்காக ஏற்பட்ட வண்ணமே இருக்கின்றது. தன்னை பாதித்த, தன்மீது வினை புரிந்த ஒவ்வொன்றிலும் தான் உணர்ந்தவற்றை, அப்படியே மற்றவர்களுக்கும் தொற்றிவிட எத்தனிக்கும் ஒருவர் ஏதாவதொரு கலை வடிவத்தைக் கையிலெடுக்கிறார். மொழியாலான ஒரு கலை வடிவமாகக் கவிதையை ஒரு கவிஞர் கையிலெடுக்கிறார்.

தங்கையா மருதமுத்து இவ்வாறு கவிதையைக் கையிலெடுக்க முயற்சித்திருக்கிறார் என்பது அவரது எழுத்துக்களைப் படிக்கும்போது தெளிவாகவே புரிகிறது.

கவிதை எழுத விரும்பி அதற்கான முயற்சிகளைத் தொடங்குபவர்களுக்கு முன்னால் ஏராளமான சவால்கள் காத்துக்கிடக்கின்றன.

உடைத்துப் போடப்பட்ட வசனங்களைக் கவிதை என்ற பெயரில் சில இதழ்கள் பிரசுரித்து வருகின்றன. அவற்றைப் படிப்பவர்கள் கவிதை அப்படித்தான் இருக்கும் என்ற மனப்பதிவினைப் பெற்றுவிடுகிறார்கள்.

கவிதை வாசிப்பை இன்னும் சற்று அகலமாக்குபவர்களுக்குச் சந்தையை மனதில் வைத்து எழுதப்படும் கவிதைகளே முதலிற் தாராளமாகக் கிடைக்கின்றன. விலையுயர்ந்த தாள்களில் கவர்ச்சியான வடிவமைப்பில் இவ்வாறான கவிதை நூல்கள் வெளிவந்து புத்தகக்கடைகளை நிறைக்கின்றன. இப்புத்தகங்களை எழுதுபவர் சினிமா மூலமாகவோ வேறுவழிகளிலோ பிரபலமானவராக இருப்பார். சந்தையில் இவர்களின் கவிதை நூல்களே குவிந்து கிடப்பதால் வாசிக்கத் தொடங்குபவர்களுக்கு வேறு தெரிவுகளும் எளிதில் கிடைப்பதில்லை.

இவ்வாறாகச் சந்தையில் பிரபலமாயிருக்கும் கவிஞரின் நடையும் பாணியும் சாயலும் புதியவர்களைத் தொற்றிக்கொள்கின்றன. இத்தகைய கவிதைகளின் அலங்காரமான வார்த்தைகளும், தேவையற்றுச் சேர்க்கப்படும் அதிர்ச்சிதரும் உருவகங்களும், உவமைகளும், மொழி விளையாட்டுக்களும், சிலேடைகளும் கவிதையின் உயிரைக் கொன்றுவிடுகின்றன.

எமது சூழலை அடிப்படையாகக் கொண்டு, எமது பிரச்சினைகளையும் எமது வாழ்வையும் பற்றி எம்மைச் சிந்திக்கவிடாது

வலிந்து தமிழகச் சூழலை எம் கவிதைகளுள் எம்மையறியா மலே புகுத்திவிடுகின்ற வேலையையும் சந்தையில் குவிகின்ற இத்தமிழகக் கவிதைகள் செய்துவிடுகின்றன.

இன்னும் கொஞ்சம் வாசிப்பை ஆழப்படுத்தி அகலப்படுத் திச் செல்வோர் முன், புதிய பழைய பண்டிதர்கள் கையில் அளவு கோல்களுடனும் பிரம்புகளுடனும் தோன்றுகிறார்கள். கவிதை என்பது இப்படித்தான் இருக்க வேண்டும் என்கிற சட்ட கங்களையும் கோட்பாடுகளையும் கையில்வைத்துக் கொண்டு இறுகிய முகங்களுடன் அலைகிறார்கள். கவிதைகளை விடவும் இவர்களது கண்டிப்பான விமர்சனங்களையே புதியவர்கள் முத லில் வாசிக்க நேர்கிறது.

கவிதை என்பது ஒரு தெய்வீகச் செயல் என்றும், கவித் துவம் என்பது இறைவனால் வழங்கப்படும் தனிச்சிறப்பான கொடை என்றும், கவிஞர்கள் ஏனைய மக்களிடமிருந்து மேம் பட்ட - மாறுபட்ட புனிதமான ஆசாமிகள் எனவும் ஒரு மாயத் தோற்றம் கவிதை எழுத முனைபவர்களுக்குள் திணிக்கப்படு கிறது. இவ்வாறு திணிக்கப்படும் மனநிலை கவிஞர்களையும் அவர்களது ஆக்கத்திறனையும் மக்களிடமிருந்தும் அன்றாட வாழ்விலிருந்தும் பிய்த்தெடுத்து அவர்களை வானத்தைப் பார்த் தபடி யோசித்துக் கொண்டிருக்கும் உலகத் தொடர்பற்ற உயிரி னங்களாக மாற்றிவிடுகிறது.

இச்சவால்களை எல்லாம் தாண்டி வந்து, உலகெங்கும் எழு தப்பட்ட கவிதைகளையெல்லாம் தேடிப்படித்து அவ்வாசிப்ப னுபவத்தைக் கொண்டு தனது கவிதை எங்கே எப்படிச் செயற் பட வேண்டும் என்பதனைத் தானாகவே உணர்ந்து ஒரு கவிஞர் செயற்படத் தொடங்குவதென்பது பெரும்பாடு.

கவிதைகளின் பாடு பொருளினை வெறும் காதல், பாசம், தாய்மை, பக்தி, இயற்கை, அழகு என்கிற குறுகிய வட்டத் துக்குள் அடக்கிவிடும் ஆரோக்கியமற்ற சூழலும் ஒரு சவால். மேற்சொன்னவற்றையே கவிதைகள் பேசிக் கொண்டிருந்தால் எவரது எதிர்ப்பினையும் சம்பாதிக்க வேண்டியதில்லை. எல்லோ ருக்கும் நல்லபிள்ளையாக கவிஞர் புகழோடு வாழ்ந்து மறைந் துவிடலாம். ஆனால் வாழ்வின் நடைமுறை அவ்வாறிருப்ப தில்லை. எம்மைச் சூழவுள்ள மனிதர்கள் அன்றாடம் ஆயிரக்க ணக்கான முரண்பாடுகளுக்கும் சிக்கல்களுக்கும் அடக்குமுறை களுக்கும் அநீதிகளுக்கும் முகம் கொடுக்கிறார்கள். நாமும் அம்மக்களின் ஒரு பகுதியாகத்தான் இங்கே வாழ்கிறோம். எமதிந்தப்பாடுகளை எவருக்கும் அஞ்சாமல் பாடுபொருளாக்க வேண்டிய சமூக அரசியற் கடமையைக் கவிதைகள் மறந்து விடலாகாது.

கவிதை என்பது விடுதலைக்கான ஓர் அரசியற் கருவியு மாகும். தங்கையா மருதமுத்து இச்சவால்களுக்கெல்லாம் முகம் கொடுத்தபடி இச்சவால்களால் பெற்ற தழும்புகளுடனும் சவால் களை வெல்லும் முயற்சியுடனும் தன் எழுத்துக்களைப் படைத் திருக்கிறார்.

தான் வாழும் சமூகத்தில் தன்னையும் தன்னைச் சுற்றி வாழும் மனிதர்களையும் உன்னிப்பாகக் கவனித்தவாறு மனிதர் களது அவலங்களையும் அழகுணர்ச்சியினையும் காதலையும் நம்பிக்கையையும் கண்ணீரையும் விடுதலை ஆர்வத்தையும் தன்னாலியன்றவரை தனித்துவத்தோடு சொல்ல முயல்கிறார்... சொல்லியிருக்கிறார்.

கண்ணாலே கத்திவச்சு
கவ்வாத்து வெட்டாதே
நேத்தி வச்சுக்காத்திருக்கேன்
ஏ உயிரக் கொய்யாதே

காமன் கூத்துப் பொட்டலுல
கத்தரிப்பூச் சேலைகட்டி
கடைசிவரி நின்னுக்கடி
கண்ணாடி வளவிதாரேன்

பூனைகண்ணை மூடிக்கிட்டா
பூலோகம் இருளாது
ஆத்தாவும் கூடவரும்
அவச்சொல்லு வேணாம்மச்சான்

எனும் காதலர் உரையாடலாக இருந்தபோதும்,

சேலைத் தலைப்பில்
சாயம் இருக்காது
தன்பிள்ளை தலைதுடைக்கும்
பாகம் அது.
பாவாடைத் தலைப்பில்
நாடா இருக்காது
கூடைக்குக் கயிறுவாங்க
காசு ஏது

என்று வறுமையை விபரிக்கும் போதும்,

அழுதே பிறந்துவிட்டேன்
சிரித்தே வாழ்ந்திருப்பேன்
தடைகளைத் திரியாக்கி
எரித்து ஒளி பெறுவேன்

தாவணிதோள் போட்டு
தைரியம் நெஞ்சேத்தி
வீரம் நடக்கிறது
விடிவெள்ளி தெரிகிறது

என்று மலையகத்திலிருந்து நகரத்துக்குப் பிழைப்புத் தேடிப் போன பெண்ணின் தன்மான விடுதலை வேட்கையினைப் பாடும் போதும் அவரது கவிதைகளில் அவரைச்சூழவுள்ள மனிதர் களின் வாழ்வு தனித்துவமாக வெளிப்படுகிறது.

முயற்சித்தால்...

கவிதை பற்றி வலிந்து திணிக்கப்படும் மனப்பதிவுகளையும், கவிதையின் உயிரைத் தொந்தரவு செய்யும் தேவையற்ற அலங்காரங்களையும் தாண்டி அற்புதமான கவிதைகளைப் படைக்கவல்லவராகத தெரிகிறார் தங்கையா மருதமுத்து.

தமிழின் கவிதைகளையும் உலகக் கவிதைகளையும் முடிந்த வரை தேடிப்படித்துப் பரிச்சயமாக்கிக் கொண்டு தன் மக்களது வாழ்க்கையினை ஆழப்படித்து நுணுகி ஆய்ந்து தனது அறிவுத் தேடலை இன்னமும் விசாலமாக்கிப் பயன்மிக்க தனித்துவமான கவிதைகளை இவர் படைப்பார் என்று நம்புகிறேன்.

மு. மயூரன்
இலக்கியச் செயலாளர்
தேசிய கலை இலக்கியப் பேரவை

# சிறப்புரை

மொழியைப் படைத்த மனிதன் மொழியிலிருந்து உருவாக்கிய உன்னதமான, முதன்மையான உற்பத்திப் பொருள் கவிதை, மொழியின் அழகைப் பொழியும் வடிவம் கவிதை. உணர்வில் உயிரைப் படியவைப்பதும் கவிதை.

கவிதை சிலருக்கு மொழி விளையாட்டு
சிலருக்கு பொழுது போக்கு
சிலருக்கு வாழ்க்கை
சிலருக்கு உழைப்பு

கவிதைகளைப் படிப்பதும் கவிதைகளுடன் பழகுவதும் அலாதி இன்பம், கவிதைகளோடு ஒன்றித்துக் கலப்பது மகா அனுபவம். கவிதைகளைப் படிக்கும் வாசகர்களை நல்ல கவிதைகள் கவிஞராக்கி விடுகின்றன. நல்ல வாசகருள் சிலர் நல்ல கவிஞராகி விடுகிறார்கள்.

மனித வாழ்வின் ஒவ்வொரு கணமும் அனுபவங்களைக் கொடுத்துக் கொண்டிருக்கின்றது. அக்கணம் பெறும் தனிமனித அனுபவங்கள் சிலரால் கவிதை ஊடகத்தின் வழி பகிர்ந்து கொள்ளப்படுகின்றன. ஒத்த அனுபவங்களும் ஒவ்வாத உணர்வுகளும் ஒன்றினையொன்று கவ்வியும் தள்ளியும் கடந்து சென்றுவிடுகின்றன.

இதுவரை வாழ்ந்த வாழ்வில் பல்வேறு பாதைகளைக் கடந்து வந்துள்ள மருதமுத்து அப்பாதைகளில் பெற்றுக் கொண்ட பட்டறிவுகளை, பார் மீதான பார்வைகளைக் கொண்டு கற்பனையில் உதித்த கருத்துக்களைக் 'கவி' வடிவில் தந்திருக்கிறார்.

நாளைய சந்ததிக்காய்
நான்கெழுத்துச் செய்தாலும்
நாயகன் கண்களுக்கு
நீயும் படைப்பவனே!
உயிர் செய்த எழுத்தினை
உலகோடு சேர்ந்திட

அப்பப்போ, ஆங்காங்கே எழுதப்பட்ட அவற்றைத் தொகுத்துச் 'சிறகிழந்த கிளிகள்' ஆக உருக்கொடுத்துப் பறக்கவிட்டிருக்கிறார்.

தான் வாழ்ந்த சூழல், சந்தித்த மனிதர்கள், செய்த சாதனைகள், தவறவிட்ட சந்தர்ப்பங்கள், கண்ட சீர்கேடுகள், காண

விரும்பும் தவிப்பும் மருதமுத்துவின் கவிதைகளாகியுள்ளன.

வீதிக்கொரு சாதிச் சண்டை
சந்திக்கொரு கசிப்புக் கடை
பீலிக்கரையிலோ ஆடைகலைந்த வார்த்தை
பிறகெங்கு படிக்கும்
எம் பிள்ளை பாடத்தை?

எனச் சமுதாய உணர்வோடு தான் வாழ்ந்த சமுகத்தைப் பல கேள்விகள் கேட்கும் ஆதங்கங்களாகவும் உரிமையோடு வாழத் துடிக்கும் மானுடத்தின் குரலாகவும், மொழி-இனக்காப்புக் கோசங்களாகவும் விடுதலைக் கீதங்களாகவும் மருதமுத்துவின் கவிதைகள் காணப்படுகின்றன.

செந்தமிழ் வழக்கும் கொடுந்தமிழ் வழக்கும் விரவிவரும் இவரது கவிதைகள் எவ்வழக்கிலும் பேச்சோசைப் பண்புடையனவாய் உள்ளமை சிறப்பு. இருந்தும், மொழிகொண்டு வரையப்படும் சித்திரக் கவிதைகள் இன்னும் தீட்டப்படக்கூடியனவே.

இயல்பாகவே பாடசாலைக் காலங்களில் நடைபெற்ற போட்டிகளில் வலயம், மாகாணம், தேசிய மட்டங்களில் பேச்சு, விவாதம், கட்டுரை, கவிதை, நாடகம், வல்லுப்பாட்டு எனக் கலைகளில் நாட்டங்காட்டி.

பள்ளிகள் பல பாராட்ட
மேடைகள் எங்கும் மாலையிட
ஆசான்கள் பலர் ஆசி கூற
முதலாமவனாய் உலா வந்த...
மருதமுத்துவின் ஏட்டுக்கல்வி
இடைநடுவில் நின்றுவிட,
பித்தம் எனக்கென்று
பேதலிக்கத் தேவையில்லை
நித்தமுன் நிழலிருந்து
சாகடிக்க விருப்பமில்லை
தொலையாது வாழ்வை
தூய்மை செய்வதென்றால்
உழையாது முடியாது...

எனக் குடும்பநிலை காரணமாகத் தலைநகர் நோக்கிப் புறப்பட்டும், மாண்டுவிடாமல் மீண்டெழுந்து தமிழ்க் கவிதைப் பங்குகளில் சிறிதளவைத் தான் வாங்க வந்திருக்கும் இவருக்குத் துணைக்கரம் கொடுப்பது இலக்கியக் கடனே.

மரபு, புதுசு, பழமை, படிமம் எனப் பாகுபடுத்திப் பார்க்கும்

கவிதை உலகம் மருதமுத்துவையும் ஒருவகைக் கூடைக்குள் போடவே துடிக்கும், சிலவேளைகளில் வெளியிலும் வீசக்கூடும்! காலமே பதில் சொல்லும்.

முதற்பிரசவம் அனுபவமற்றது தெரிந்தும் தெரியாமலும் தவறுகள் நடப்பது. இருந்தும் அவரே பெற்றெடுக்க வேண்டும் என்பதால் ‘சிறகிழந்த கிளிகளைப்’ பிரசவித்திருக்கிறார்.

எனவே, கவிதைகளைப் படிப்போர் ஆக்கபூர்வமான கருத்துக்களை - விமர்சனங்களை - மருதமுத்துவிற்குக் கொடுத்து அவரின் செழிப்பான தொடர் வளர்ச்சிக்கும் தமிழ் கவிதை விருத்திக்கும் உதவி செய்யலாம்.

எனக்காய்ச் செய்த்ீர் எத்தனை அர்ப்பணம் - என்
உயிர்தொட்டு ஒவ்வொன்றும் உங்கள்
பாதத்தில் சமர்ப்பணம்...

மார்க்கண்டன் ரூபவதனன்
விரிவுரையாளர்
ஊவா வெல்லஸ்ஸப் பல்கலைக்கழகம்
பதுளை.

# என்னுரை

இலங்கைத் திருநாட்டில் எழில் கொஞ்சும் மலையகத்தில் ஹாலிஎல பிரதேசத்தில் ரொசட் தோட்டத்தில் 1981ஆம் ஆண்டு பிறந்த நான் எனது ஆரம்பக்கல்வியை ரொசட் தோட்டம் பாடசாலையிலும் பின் சாதாரண தரம் வரை ஹாலி எல தமிழ் மகா வித்தியாலயத்திலும் பயிலும் வாய்ப்புக் கிட்டியது. எனக்கு ஐந்து வயது இருக்கும் போதே எனது ஊரில் வசிக்கும் கலைத் துறையில் ஈடுபாடு கொண்ட திரு. ஜெக ஜெயம் ஐயா என்பவர் என்னை தூக்கிக்கொண்டு மேடை நாடகம் செய்வார். இதுவே எனது கலைத்துறையின் ஆரம்பம்.

ரொசட் தோட்ட பாடசாலையில் 1987முதல் 1995வரையான காலப்பகுதியில் வாசிப்பு, ஓரங்க நாடகம், நாட்டிய நாடகம், சமூக நாடகம், இலக்கிய நாடகம், பேச்சு, விவாதம், நடனம், வில்லுப்பாட்டு போன்ற பல மேடை நிகழ்ச்சிகளில் பங்குபற்றி 50க்கும் மேற்பட்ட சான்றிதழ்களை பெறும் வாய்ப்பு கிடைத்தது. அதிலும் வில்லுப்பாட்டு அகில இலங்கை ரீதியில் முதலாம் இடத்தை பெற்றதுடன் அதில் இடம்பெறும் ஒரு பாடலில் ஒரு வரி கூட நான் கூறியதை மாற்றாமல் வைத்திருந்து என்னை தட்டிக் கொடுத்தார் ஆசிரியர் கந்தசாமி அவர்கள்.

1993 என் பாசத்திற்குரிய தந்தையை இழந்து விட்டாலும் அந்தக் குறையே தெரியாதளவு என் ஆசான்கள் அனைவரும் என்னை கல்வி வழி காட்டி வந்தனர். பின் ஹாலிஎல தமிழ் மகா வித்தியாலயத்தில் கல்வியைத் தொடர்ந்த நான் அங்கும் பல மேடை நிகழ்ச்சிகளில் பங்குபற்றியதோடு தரமான வில்லுப் பாட்டு, நாடகம் போன்ற நிகழ்ச்சிகளை தயாரித்து மேடையேற்றும் வாய்ப்பினை ஆசிரியர் குழாம் எனக்களித்தனர். இதுவே கலை த்துறையில் நான் அதிகம் ஈர்க்கப்பட காரணமானவையாக இருப் பினும் எமது சூழல் காரணமாக நான் கல்வியை கைவிட நேர்ந் தது. நகர்ப்புறங்களுக்கு தொழிலுக்காக சென்றேன். நடிப்பிலே எனக்கு அதிகம் ஆர்வம் இருந்ததால் வாய்ப்புக்காக முயற் சித்தும் வெற்றியை விட தோல்வியே என்னை அதிகம் தழுவி யது. இவ்வேளையில் மனதில் என் இனம், சமூகம், எதிர்கால சந்ததி எனும் சிந்தனை தளிர் விட்டுக்கொண்டே இருந்தன.


என் பயணத்தில் பார்ப்பவைகளை பேனா வடித்தது. இத னையே இன்று 'சிறகிழந்த கிளிகளாய்' உங்கள் முன் வைக்கி றேன்.

தங்களுக்கு எத்தனையோ வேலைப்பளு இருந்தும் இந்தச் சிறியேனின் கோரிக்கையை ஏற்று இதற்கான முன்னுரை எழுதிய இந்து காலச்சார அலுவல்கள் திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர் உயர்திரு எம். சண்முகநாதன் அவர்களுக்கும் வாழ்த்துரை எழுதிய உயர்திரு விரிவுரையாளர் திரு. ரூபவதனன் அவர்களுக்கும், அணிந்துரை எழுதிய தேசிய கலை இலக்கிய பேரவை இலக்கிய செயலாளர் உயர்திரு மு. மயூரன் அவர்களுக்கும் மனமார்ந்த நன்றிகளை கூறிக்கொள்வதோடு படைப்பாளி என்பதன் ஆழத்தை எனக்குணர்த்திய அண்ணன் மல்லியப்புசந்தி திலகர், இப்புத்தகத்தின் அட்டைப்படம் மற்றும் பக்க வடிவமைப்பைச் செய்த அண்ணன் சுரேஷ் அவர்களுக்கும் மற்றும் பலவழிகளிலும் உதவி செய்த எமது நிறுவனத்தின் உரிமையாளர் திரு. ரமேஸ் அவர்களுக்கும் கணக்காளர் மதிப்பிற்குரிய திரு. மு.ஜெகதீசன் ஐயா அவர்களுக்கும் இறுதி வரை இப்புத்தகத்தின் வெளியீட்டுக்காக என்னை விடவும் முன் நின்ற தம்பி ரஜீபன், திரு. கிஷோ, நண்பர் திரு. பழனி விஜய குமார் அனைவருக்கும் இதயபூர்வமான நன்றியை தெரிவிப்பதோடு சிறப்பாக இப்புத்தகத்தை அச்சிட்டு வெளியிடும் பாக்யா பதிப்பத்தாருக்கும் மனமுவந்த நன்றிகள் உரித்தாகுக.

இனி வரும் காலங்களில் என் பேனாவின் வியர்வை மலையகத்தில் மாற்றத்திற்காக இருக்கும் என்பதை இன் முகத்துடன் கூற விளைகிறேன்.

என்றும் அன்புடன்...

**தானா. மருதமுத்து**
ரொசட் தோட்டம்,
ஹாலி-எல
07-07-2014



# உள்ளே...

1 வாழியவே
2 தாய்
4 உயிர் மூச்சு
5 கல்வி
6 அன்புக்கு உயிர்கொடு
7 உயிரே...
8 தோள் நிறுத்து
10 என்னவர் காதல்
12 உலகே தாழ் கிடக்கு
14 பெண், அடிமை இல்லையே!
17 விலைமாது
20 கண்ணீரில் கரைத்த பொட்டு
23 வேலி
26 சிறகிழந்த கிளிகள்
28 ஒருவேளை சிரிப்பில்
30 துயிலும் உள்ளம்
32 இறைவா சாபமிடு
33 பொறுமையுடன் ஒருநாள்
35 வீர வணக்கம்
37 கலங்கி நில்லாரோ?
39 இறைமனம் என்ன செய்யும்?
42 மொழி பேசும் இமைகள்
45 இன்னல் துடைப்பாயா?
46 மரண முள்
47 மரண சான்றிதழ்

# வாழியவே

கருவிலே உன் உருவமாய்
எனை செதுக்கி வைத்தேனே - என்
உயிர் என்ற சுவாசமாய்
உனை இருத்தி வைத்தேனே

இருதயத்தின் ஒளியில்
உன் நாமம் ரசித்தேனே
தமிழ் என்ற பதம் சொல்ல
என் நா வடிக்கும் தேனே

ஐம்பெரும் காப்பியத்தை அருளிவைத்தாயே
காலத்தால் செம்மொழி சத்தியம் ஜெயித்தாயே
அடியேன் நெஞ்சத்துள் ஆழ இருந்தாயே
அனைவரின் நாவிலும் அமர வா தாயே

விண்ணவர் அகம் வாழும் வீரத்தமிழே
மண்ணவர்க்கு அறம் தந்த மறத்தமிழே
காலமும் எழிலான கன்னித் தமிழே
தன்னிகர் இல்லாத செந்தமிழே

அஞ்சாது அடி நடக்கும் அறத்தமிழ் வாழியவே
நெஞ்சமெல்லாம் உரமூட்டும் அன்புத்தமிழ் வாழியவே
ஈடற்ற வைரமாய் வாழும் தமிழ் வாழியவே
வயதற்ற பாவையாய் வண்ணத்தமிழ் வாழியவே

குறையற்ற செல்வமாய் பவளத்தமிழ் வாழியவே
பண்பாடு போதித்த சங்கத்தமிழ் வாழியவே
ஆழி அழிந்தாலும் அமுதத் தமிழ் வாழியவே
சீர் நடக்கும் செம்மொழியே நின் சிறப்பு வாழியவே

# தாய்

மழையென்ன புயலென்ன
வாட்டும் வெயிலென்ன
வாடாமல் வாழ
வையத்தில் உளதோ
கருவிலும் ஒரு கோவில் !

உனக்கென உண்டு
உனக்கென உறங்கி
உனையே சுமைதாங்கி
உனக்கென வலிதாங்கி
வழிவிடுவோர் யார் உளரோ
அன்னையை அன்றி !

இருக்கும் உதிரம் எல்லாம்
பாலென பசிதீர்த்து
நாளைய பாலுக்கு
வியர்வையாய் உதிரம் சிந்தி
உடலுருக்கி ஒளிதந்த
அன்னை அவளுக்கு
ஏழு உலகில் ஏதும்
ஈடு உண்டோ?

மேல் பாதம் தொட்டிலிட்டு
பக்குவமாய் நீராட்டி
அங்கம் உறுப்பமைத்து
அழகு பெற செய்பவளே !

காற்றுக்கும் கண்மறைத்து
சுவாசம் கொடுத்தவளே
விழி காக்கும் இமைகளுக்கும்
ஆசான் ஆனவளே !

பிள்ளையாய் எனை பெற்று
செல்லமாய்க் கொண்டாலும்
செல்வம் என் ஆசை தனை
செவிமடுக்க மாட்டாயோ ?

என் உயிர் உன்னில் தந்து
இப்போதே மறைகிறேன்
காலடியில் வைப்பாயோ ?
காலமும் நான் தொழுதிருக்க !

# உயிர் மூச்சு

பாறையும் பிளவுறும்
பகலவன் நாடகம் - கண்டு
இரு பாதங்கள் பயப்படவில்லையே
கருவினில் கதறும் திருமகன் - எண்ணி
கடின உழைப்பில் ஓய்வேதும் இல்லையே !

சிகரத்தில் சிரம் பட்டு
உதிரத்தால் உணவளித்து
ஈரைந்து மாதம் எனைச் சுமந்து
ஈன்றெடுத்த என் அன்புத் தாயே !

வரும் காலம் சிந்தை கொண்டு
வறுமையிலும் கற்கவென்று
நின்பிள்ளை கரம்பிடித்து
குருவிடம் சமர்ப்பித்து
மண்ணிலே தான் மறைந்து
நெஞ்சிலே வாழும் எம்
பெருமைக்குரிய தந்தையே !

உள்ளத்தை உரம் படுத்தி
நல்லெண்ணத்தை பயிரிட்டு
இருளிய கண்களை
அறிவினில் மிளிரச் செய்து
சிறப்பான வழிசமைத்து
சிற்பமாய் எனையாக்க
உளியாய் தானிருந்த உயர்திரு
கோ. கந்தசாமி நாமம் பூண்ட ஆசானே !

மூச்சு எனும் மூன்றெழுத்தில்
மூவரும் குடிகொண்டீர் - இது
அடங்கும் வரை உங்கள்
ஆட்சியே இவ்வுள்ளத்தில்

எனக்காய் செய்தீர் எத்தனை அர்ப்பணம் - என்
உயிர் தொட்டு ஒவ்வொன்றும்
உங்கள் பாதத்தில் சமர்ப்பணம் !

# கல்வி

இருகால் முடக்கி முழங்காலால் நடந்தாயே அது கல்வி
தாயின் இருவிரல் பிடித்து முதல் அடி வைத்தாயே அது கல்வி
ஒரு வரி தேவாரம் ஓயாமல் இசைத்தாயே அது கல்வி
உனக்கு மட்டும் நீ நடனித்தாயே அது கல்வி

ஈராமாண்டிலே எடுத்த இரு முட்டை அது கல்வி
பின் உறக்கம் கொள்ளாது வந்த முதல் நிலை அது கல்வி
ஐந்தாம் ஆண்டிலே அறியாத கடிதம் அது கல்வி
நின் புலமைப்பரிசிலுக்கு புன்னகைத்தனர் பெற்றோர் அது கல்வி

பள்ளியில் கற்றது எழுத்தில் கல்வி
பருவ காலத்தில் காதல் கல்வி
தொழிலை நாடுகையில் படும் தொல்லை கல்வி
தொழிலுக்கு சென்றதில் குடும்ப துன்பம் கல்வி

திருமணம் கொண்டதும் இல்லறக் கல்வி
தனிமனை சென்றதும் தலைமைத்துவக் கல்வி
தன் பிள்ளை பெற்றதில் ஆண்மைக் கல்வி
தரணியில் மிகை செய்வது தாய்மைக் கல்வி

எம் ஓய்வில் ஊதியம் இளைப்பாறும் கல்வி
ஓயாமல் முணுமுணுக்கும் அனுபவக் கல்வி
எருமைக்கும் கூட உழவுக்கு கல்வி
எறும்பில் இருந்து முயற்சிக்கு கல்வி

இயலாமை உந்தன் இரகசியக் கல்வி
மரணத்தில் மீள மண்டாடுவதும் கல்வி
மண்ணில் உரமாகும் உன்னுள் உள்ள கல்வி
மறையுமுன் முனைந்து மற்றவர்க்கு கல்வீர்

# அன்புக்கு உயிர்கொடு

காலத்தின் கட்டாயம்
கலைந்தன கூடுகள்
உயிர்காக்கப் பறந்த நாம்
உலகுக்கு அகதிகள்

நல்லறம் காத்து
இல்லறம் கைகோர்த்து
கல்லறை அவன் செல்ல
தனித்தவள் நான்
தரணியில் விதவையாம்

இறையவன் தீர்ப்பளித்தான்
ஆழிக்குள் எம் உறவுகள்
காவுகொடுத்தோர் நாம்
கலியுக அநாதைகள் !

அகதி, விதவை, அநாதை
இருண்ட உலகில்
புரண்டு வந்தவனே
ஈன்ற தாயின் தொப்புள் கொடியன்று
நீ கொண்ட உறவேது

இவ்வுலகில் சஞ்சரித்த போது,
விழித்தெழு தோழனே,
கிழித்தெறி மடமையை,
உறவினை உயர்த்திட
உதிரத்தை பங்கிடு

அன்புக்கு உயிர்கொடு
தாழ்வுமனம் கலைத்திடு
அனைவீரும் அணைத்திடு
பொற்காலம் படைப்போம் புறப்படு...

# உயிரே...

உயிரே உன் இதய திருவடியில்
என் நாமம் பதியாதோ!
வதனத்தில் இதழ் பதிக்க
வாய்ப்பொன்று கிட்டாதோ !

மௌனத்தின் கற்சிலையே
மனம் மெழுகாய் மாறாதோ !
வஞ்சியரில் பிறைநுதழே
கெஞ்சுகிறேன் இரங்காயோ !

ஏந்திலையே எனை இழந்தேன் - உன்
கூந்தலிலே சிக்குண்டேன்
பாராமல் பார்த்து விட்டு
பாதகி போல் செல்கிறாயே ?

பாவம் என்ன செய்தேன்
பெண்ணே
பார்வை கூட கிட்டாதோ !

மல்லியே உன்னாலே
கொல்லியில் புழுவானேன்
மௌனத்தை விடுவித்து
மலர்வாயோ மூவார்த்தை

# தோள் நிறுத்து

வியர்வை எனும் பொன்வடித்து
மதுவினால் பானைசெய்து
வறுமை தன்னில் மூடிக்கொண்டு
இருளில் வாழ்வது யார் தவறோ?

அன்று கற்க நெறி இல்லையென்று
கொத்தடிமையாயிருந்து
குமுறியழுதோமே
இன்று பெற்ற பிள்ளை கற்கவில்லை
விட்டபிழை யார் தவறோ?

வீதிக்கொரு சாதிச்சண்டை
சந்திக்கொரு கசிப்புகடை
பீலிக்கரையிலோ
ஆடைகலைந்த வார்த்தை
பிறகெங்கு படிக்கும்
எம்பிள்ளை பாடத்தை?

இயற்கை அன்னையோ
வாழ்வது எம்மோடு
இருவிழியில் முழு உலகும்
பார்ப்பதும் நம்வீடு
இயற்கையில் வறுமையை
யார் கொடுத்தார் கையோடு?

கயவரின் நுரை அலை குடித்து
நுரையீரல் கருகி
தோழரே என்ன துயில்கிறீரோ ?
எம் சந்ததி தோளில் ஏந்தி
சாதனை படைக்க துணிவீரோ ?

இருநூறு வருடங்கள்
நிலவுடன் வாழ்ந்ததில்
சூரியன் இருப்பதை அறியீரோ ?
கதிரவன் கண்டவர்
காணாது மற்றோரை
காரிருளில் தள்ள முனைந்தீரோ ?

கொம்புத் தேனொன்றும்
பெரிதல்ல எமக்கு
கொட்டும் வியர்வைக்கு
இவ்வுலகே தாழ் கிடக்கு

எட்டி உதைத்து
தடைகளை தகர்த்து
மலையக இளமையே
சமூகத்தை தோள் நிறுத்து !

●

# என்னவர் காதல்

மண்வெட்டி கையெடுத்து
மாடசாமி தட்டும் சத்தம்
ஊருக்கே ஒலி கேட்கும்
சூரியனும் கண் விழிக்கும்

நீளச்சட்டை கை மடிச்சி
நெத்தியிலே போட்டு வச்சு
மெல்ல அடி வச்சானே
மெதுவா ம(ை)ல போக

முதல் பிரட்டு தான் பிடிச்சி
முந்தியடி வச்ச புள்ள
முந்தா(ை)ன ஒளிச்சுக்கிட்டா
படங்கு கட்டும் கயிறுகுள்ள

தாத்தாவின் வேட்டியில
த(ை)லப்பா செய்த புள்ள
கூடையின் முடிவை
குந்த வச்சா இடுப்புல

செருப்பில்லா கால் பார்த்து
சிரிக்குது தார் ரோட்டு
பிள்ளையார் சந்தி வந்து
வச்சிகிட்டா நெத்திப்பொட்டு

பத்தடி துாரத்திலே
காத்திருந்த மாடசாமி
பழகு புள்ள சத்தியமா
பாத்துக்குவேன் பக்குவமா

கண்ணாலே கத்தி வச்சு
கவ்வாத்து வெட்டாதே
நேத்தி வச்சு காத்திருக்கேன்
என் உயிரை கொய்யாதே!

ஊரே தப்படிக்கும்
ம(ை)ல எல்லாம் சா(ை)ட பேசும்
மானங்கெட்ட பொளப்பு வேணாம்
எங்கப்பன் கிட்ட கேளு மச்சான்!

சித்திரைக்கு முன்னால
சேதி கேட்டு வருவேண்டி
செண்பகமே கொலுசு போல
சிரிச்சதுவே போதுமடி!

காமன் கூத்து பொட்டலுல
கத்தரிப் பூ சே(ை)லகட்டி
க(ை)டசிவரை நின்னுக்கடி
கண்ணாடி வளவி தாரேன்!

பூ(ை)ன கண்ணை மூடிகிட்டா
பூலோகம் இருளாது
ஆத்தாவும் கூட வரும்
அவச் சொல்லும் வேணா மச்சான்!

மஞ்ச வெயில் மாறும் போது
கொஞ்ச வரும் காத்தோடு
ஆத்தங்கரை வா புள்ள
ஆ(ை)ச முத்தம் நான் தாரேன்!

கட்டபொம்மன் மீ(ை)ச வச்சு
கரும்பாட்டம் பேசும் மச்சான்
கட்டி தாலி கூப்பிடுங்க
கட்டெறும்பா நா வாரேன்!

# உலகே தாழ் கிடக்கு

அங்கவீனமற்றவன்
அகவீனமுற்றாயோ?
சொந்தக்கால் நடந்தும் - பிறர்
சொல்வழி நடப்பாயோ

முண்டாசை இடுப்பு அணியும்
உன் இடுப்பும் தானே குனியும்
குனிவது தான் உன் வெற்றியோ?
இதற்கு மலையூரான் எனும் பட்டமோ?

காலச் சுவடுகளை காணவிரும்பாது
கதறி அழும் உன்
குழந்தைகளை காணாயோ?
இரவில் இடறி கோலமிடும்
உன் இருகால்
மதுவிலக்கு காணாதோ?

இருமதி கண்ட இடைவெளியில்
ஒருநதி வியர்வைதரும் என்னவனே!
முழுமதி காலத்தில் மதுவால்
முடமாக முனைபவனே
முத்தான நின் பிள்ளை
ஏக்கம் அறியாயோ?

செப்புகிறேன் சில வார்த்தை - நீர்
செவிமடுக்காவிட்டால்
எம் சொந்தாமே நாம்
தத்தெடுக்கிறோம் உம்மை
எம் தந்தையராய்

இறையவன் வஞ்சகம் புரியாது
பிறருக்கு இரையாய் இருப்பவனே!
கல்லையும் முல்லையும் காயப்படுத்தும்
உன்கை, கால் பாதங்கள் போலவே

கயவர் உள்ளத்தை
கடினமாய் படைத்தானே ஏன்
இரக்கம் இல்லாது எமை
அவர்தம் இரையாக்கிடவோ?

இத்தனை விடயத்தில்
இருமனம் கொண்டவன்
நின் பிள்ளையின் கும்பியை
இரும்பாய் படைத்திருந்தால்
இறைவன் கூட பயந்திருப்பான்
அதனால் உன் மதுவால்
பசி எனும் தடைவிதித்தான்!

எறும்புக்கு எச்சிலும் சுனாமிதான்
துவலாது புயலுடன்
போர் செய்ய புறப்பட்டோம்
புரியாத இருளில்
அறியாமல் இருப்பதில்
இல்லை உம் தவறு
அறிந்தும் அறியாமல்
நாமிருக்க முடியாது
என்பதயும் சற்று உணரு!

விண்ணிலே வயல் செய்யும் காலமிது
மண்ணிலே உமைமாற்ற நேரமேது
மலையக குடும்பம் ஒரு சேர்ந்து
சரித்திரம் படைப்பது சத்தியம் ஆனது
உம்முடனான எதிர்காலமது
இறை தீர்ப்பில் நீர் இராவிடினும் - உறுதி
உம் பெயர் எம்மோடு வாழ்வது

தானா.மருதமுத்து

# பெண், அடிமை இல்லையே!

முற்றத்திலே கோலமிடும்
ஈக்கிள் கட்டு
முற்றுப்புள்ளி வைக்கும் இடம்
குப்பை தொட்டில்

வாசல் சிரிக்குது
சாணம் கொண்டு
துளசி மகிழுது
பிள்ளையார் சரம் கண்டு.

கந்தனின் நாமமும்
கற்பூர வாசனையும்
தென்றலோடு கை கோர்த்து
திக்கெட்டும் செல்லுது.

பித்தம் எனக்கென்று
பேதலிக்கத் தேவையில்லை
நித்தமுன் நிழலிருந்து
சாகடிக்க விரும்பவில்லை.

தொலையாது வாழ்வை
தூய்மை செய்வதென்றால்
உழையாது முடியாது
உமக்கது புரியாது!

பள்ளி விட்டு சொற்ப நாளில்
பட்டணம் போகும் மகள்
காலையில் கதையுரைத்து
மாலை வர காத்திருந்தாள்.

பூமிக்குத் துணையாக
செவ்வாயை வரன் கேட்டு
செய்மதி தூதுசெல்லும்
விசித்திர காலமிது.

பட்டினி தீர்த்துக்கொண்டு
வீட்டினுள் சிறை இருந்து
மாற்றம் காண்பதென்று
ஏற்றமே உலகம் இன்று.

பாவையர் கனவோடும்
பார் வெல்லும் பசியோடும்
பட்டணம் சேர்ந்திட்டாள்
பாரதி கண்ட பெண்ணாய்.

கழுகின் கருணையும்
ஓநாயின் இரக்கமும்
நரியின் நட்பும்
புதிதானாலும் புரிந்திட்டாள்.

நெஞ்சமில்லாக் கழுகுக்கு
நெஞ்சைப் பார்த்தே கண்ணிருக்கும்
வஞ்சமுள்ள வாலிபர்க்கு
வயதிலே தான் குறியிருக்கும்.

போதையன் கைகளோ
புறம் தொட அலைந்திருக்கும்
இடறி விழுந்தாலும்
இடம் பிடித்தே பணி நடக்கும்.

காற்று வாங்கப் போனாலோ
காதல் பட்டம் வந்து விடும்
வீடு மாறிப் போனாலோ
வேறு பட்டம் வந்து விடும்.

குறை ஆடை கொண்டாலே
மரியாதை கிடைக்குது
மனிதம் ஏனோ இங்கு
மரணித்து கிடக்குது.

கலக்கம் கொண்ட மனம்
கண்ணீர் கோரியது
பெண் அடிமை அல்லவே
பின் ஒளிந்து அழுவதேன்?

அழுதே பிறந்து விட்டேன்
சிரித்தே வாழ்ந்திருப்பேன்
தடைகளை திரியாக்கி
எரித்து ஒளி பெறுவேன்.

தாவணி தோள் போட்டு
தைரியம் நெஞ்சேந்தி
வீரம் நடக்கிறது
விடிவெள்ளி தெரிகிறது.

# விலைமாது

பாவையின் பாதங்கள் பதறாமல்,
காளை தம் கால்களால் கவ்வியிருந்தான்.
இல்லாத ஆடையில் இருப்பவளை,
தனக்குள்ளே அணைத்து மறைத்திருந்தான்.

கனிகளின் சுவைகளை புசித்தபடி - கரங்களை,
உடும்பிலும் உறுதியாய் பிடித்திருந்தான்.
ஆடவன் ஆட்டத்தை லயித்தபடி,
அவளாக ஏதோ முனகலிட்டாள்.

கன்னிக்குள் தன்னை புதைத்தவன்,
காமத்தின் தேவையில் வெற்றி கொண்டான்.
பருவத்தின் பசியில் இருந்தவளோ - அவன்
உமிழ்ந்ததை தனக்குள் ஏந்தி வந்தாள்.

காதலெனும் சிறை வைத்து
காமன் கூத்தாடினான்,
காலமெனும் விந்தைக்குள்
இவளோ கருதரித்தாள்.

வேட்டையாடியவன்
வீராப்பு பேசிச் செல்ல,
இச்சையில் எச்சம் சுமந்தவள்
ஈன்றெடுத்தாள் மகற்பேரு.

ஆறுதல் பேசி அருகில் வருவோரில்
ஆண்மை தேவைக்குள் அடைக்கலம் ஆனாள்.
மனிதம் கொண்ட இதயம் கிடையாது
சாடும் சமூகத்தில் மன்னிப்பு கோரினாள்.

கலாசாரம் தொலைத்தவள் நீ,
கலைத்தது குடும்பம் - இனி
காண்பவர் எல்லாம் இவளுக்கு தெய்வம்,
யார் உதவி செய்வாரோ என்பது எண்ணம் !
உபதேசம் கேட்டு ஓடுகிறாள் பட்டணம்.

கஷ்டப் படுவோரின்
காலமுக்க வேண்டும்,
கைகள் பிடித்து
முகம் துடைத்தல் வேண்டும்

வசதி உயர
வாடிக்கை யாளர் வேண்டும்,
வாடிக்கை யாளருக்கும்
வளைந்து போக வேண்டும்,

தொழில் எனும் திரவத்தில்
பணம் எனும் தேன் கலந்து,
காமவிஷம் கண் மறைத்து
அருந்தச் செய்தனர்,

வாழ்க்கை எனும் நாடகத்தில்
அணிந்து வந்த மாறுவேசம்,
முதலாம் அவனுடன்
இன்று (அது) அரங்கேற்றம்,

இருப்பவன் வயதோ உச்சம்,
உள்ளாடை மட்டுமே மிச்சம்,
இவளுக்கோ மனதில் கூச்சம் - அதனை
மறைத்தது தொழில் எனும் அச்சம்,

கில்லாடி கிழவாடி மெல்லமாய் உறவாடி
பணத்தாலே விளையாடி
பணிக்கின்றான் - அவள்
நாணத்தை களவாடி,

அனுபவம் வாய்ந்தவன்
ஆராய தொடங்கினான்,
தாகம் தீர்த்திட
நாவை நனைக்கிறான்

கொல்லியில் புழுவென
கோதை துடிக்கிறாள் - இவனோ
கொள்ளை இன்பத்தில்
தேன் குடிக்கிறான்,

கனிகளை கசக்கி பிழிகின்றான்,
தேனிதழ் கடித்து சுவைக்கின்றான்,
பூவுடல் சிதைத்து மகிழ்கின்றான் - அவள்
புழுவாய் துடிப்பதை ரசிக்கின்றான் ,

அசுரனின் விஸ்வரூபம் ஆரம்பமானது,
துடித்தவள் துவண்டெழுந்தாள்,
அரக்கனே இரக்கம் இல்லையோ உனக்கு,
என்றாள் கூர் விழிகொண்டு -

அப்போதும் நச்சென்று
அவன் முத்தமிட்ட சப்தம் - அவளது
பச்சை குழந்தையின்
அழுகுரலாய் காதுகளில் ஒலித்தது,

குற்றுயிர் ஆனவள் மீண்டும்
கட்டிலில் படர்ந்தாள்,
இன்னும் எத்தனை பேரோ என்ற,
கொடுமைகளின் எதிர்பார்ப்புடன்

இத்தனை கோலம் கொட்டினாளே!
இறுதி வினா உன் மணக்கோலம்?
அற்ப சிரிப்போடு அவள்முகம்,
முற்றும் துறந்தவள் என்றது,

இளமை பருவத்தின் விளையாட்டில்,
இடறி விழுந்தேன் சுடுகாட்டில்,
ஆள்காட்டி விரலில் எனை காட்டி,
அழைத்து செல் சமூகத்தை நல் வழிகாட்டி...

தனா.மைத்ரேயி

# கண்ணீரில் கரைத்த பொட்டு

விழியில் வழியும் கண்ணீர் ஊற்று
சேரும் தாய்மடி தலையணை அன்றோ
தாகம் கொண்ட மனித இனம்
தலையணை கொள்வது கண்ணீர்க்கென்றோ?

மரணத்தை நோக்கிக் குமுறி அழும்
குப்பி லாம்பின் விளிம்பில்
உயிரை தேடி உடல் அழும்
கொடூரம் காணலாம் அவ்வொளியில்

அறிமுகம் இல்லாத வாழ்க்கை இவளுக்கு
இல்லத்தரசியா, விதவையா என்ற கேள்விக்கு
இருவிழி சிந்திய கண்ணீருக்கு
கானல் நீர் என்பது சிலர்கணக்கு!

உடனிருந்த உறவுகள்
செய்த சேவை என்ன
உணராத உறவுகள்
செய்யும் கோலம் என்ன?

புரியாத உலகே
புதிர்தானே இவளுக்கு
நினைவுகள் ஆடுது
உறக்கத்துடன் வழக்கு

அன்பு தேசத்தில்
அன்பனின் சுவாசத்தில்
குழந்தைகளின் உயிரில்
கூடிவாழ்ந்த காலமது

பண்பான உலகத்தில்
பாமரம் கலைந்து
தம்பயிர்களை நெறிசெய்து
பயணிக்க அடிவைத்த காலமது

உரிமை என்றொரு புறமும்
அடிமை என்றொரு புறமும்
தோட்டா வார்த்தைகளால்
ஆயுத விவாதம்
அரங்கேறிக் கொண்டிருந்தது

செல்லும் எறிகணையும்
எமனின் அன்பளிப்பானது
மரண ஓலத்தில் மனமறியாது
உயிரை காத்திட இருகால் ஓடியது

உள்ளம் பதைபதைக்க
பிள்ளை கரம் பிடித்து
அடைக்கலம் ஆகிறாள்
சீருடையின் கரங்களுக்குள்

சிலநேரம் செல்ல
சிறகடிக்கும் இமைகள்
மணவாளன்தேடி
மன்றாடுகிறது

மறுநாள் வந்தவனை
மறுவாழ்வு பெற்றுவர
விழியால் வழியனுப்பி
உயிரும் உடன் சென்றது

ஜடமாகிய நாட்கள்
வருடமாகியது
கொண்டவனை கண்டுவர
சிந்தை முனைந்தது

சிறையிலே காணவில்லை
எனும் சேதி வந்தது
தாங்காத நெஞ்சம்
தவிடுபொடியானது.

மட்டை குடிசைக்குள்
மறுநேர சோறில்லை
பிள்ளைகள் கல்விக்கு
பள்ளி செல்ல வழியில்லை.

கிழிந்த சேலை தைக்க
ஊசி கூட உதவியில்லை
நாளைய உணவுக்கு
கிடைக்குமா ஒரு கூலிவேலை.

தலையணை ஈரம்
விடிந்ததை உணர்த்தியது
இன்று வருவானோ
என ஏக்கம் பிறந்தது

இறைவனிடம் கைகூப்பி
இதயம் தணலானது!
தணலான சுவாசத்தில்
தாலி உருகுமென
தாவணிக்குள் மறைத்து
கண்ணீரில் கரைத்த பொட்டு
நெற்றியில் ஏறியது!

# வேலி

காதலர் முதல்
கார்வண்டு வரை
காத்து நின்ற காரிருள்
கலைந்து செல்லும் வேளையானது

தசையும் தசையும் உரசிக்கொள்ள
ரகசிய அரங்கேற்றம் செய்வாற்போல்
உடலும் விரலும் நடுங்கி நடணித்தது

கழுத்தை அரவணைத்து
துயிலும் கரத்தினை
உணராத வண்ணம்
உயர்த்தி விட்டு
ஒலியில்லாது வழி நடந்து
ஒளியற்று ஊகித்து சென்று
கடமை முடித்து

கண்ணாடி வளையல் மேலொதுக்கி
எஞ்சி நிற்கும் கோதுமையில்
ரொட்டி தட்டி
உறைய முனையும் நீரில்
முகம் கழுவி
வெள்ளைச்சேலை கட்டி
கதிரவன் வரவேற்று
மல்லிகை மலர் சாத்தி
சந்தனத் திலகமிட கதறுகிறான்
கழுத்தில் கரம் இட்டு துயின்றவன்

இறையுடன் உரையாடி
இரு விழி ஓரத்தில்
கசிந்த கண்ணீர் தன்னை
கட்டை விரலால்
காணாமல் செய்து
தொட்டு தோள் தூக்கி
முத்தமிட்டாள்
உள்ளேன் உன் அன்னை என்று

இவளின் பெயர் விதவை
அக்கினி, அம்மி, அருந்ததி
ஜீவன் இல்லாத சாட்சிகளால்
இணைக்கப்பட்ட முந்தானைக்கு
சேதி சொல்லாது திகதி குறித்தது
மயானம் அவன் வரவுக்கென்று

காலன் கண்களுக்கு
கதறல் நகைச்சுவையே
காணத் தருவானோ
காவு கொண்டோரை

விதவையின் விழிகளுக்கு கோடை காலம்
கண்ணீரும் விடுமுறை கொடுத்தது
அஞ்சலி செய்தோரின்
அஞ்சல் கிடைத்தது
அரவணைப்போம் உன் பிள்ளை - நீ
மறுமணம் செய்வதென்றால்

•

ஆன்மீகம் இழந்தோரின்
அறைகூவல்
அவளுக்கு புதிதாய்த் தெரிந்தது
உள்ளக் கோட்டைக்குள் உணர்வுக்கும்
கதவிருக்கும் உண்மை
அறியாமை புரிந்தது.

பத்தினி கேட்க
கண்ணகி பதில் தந்த
அன்பனை அறைந்த ஞாபகம் வந்தது
உத்தமி நானென்ற
உரத்த சொல்லுக்கு
வாதாடும் பசி வம்பு செய்தது.

கொண்டவன் இழந்தாலும்
கூடை இழக்கவில்லை
கும்பி கொதித்தாலும்
குதிக்கால் முடங்கவில்லை.

கண்ணீரின் முன்னே
சீறும் மழை பெரிதில்லை
என் கண்மணி சிரிப்புக்கு
கதிரவனும் நிகரில்லை
வியர்வையின் வேகத்தில்
வீறுநடை அடி வைத்தாள்

பட்ட மரத்துக்கு
பசளை இட முனைவோர்க்காய்
விதவை பட்டத்தினை
வேலியாய் இட்டு வைத்தாள்

# சிறகிழந்த கிளிகள்

இறைவனின் பேனையில்
எத்தனையோ படைப்புக்கள்
மனிதன் எனும் தலைப்போ
மரணிக்கும் சிறு கதைகள்

எட்டி நடந்திடும்
இரு கால் இழந்தோரும்
கட்டி அணைத்திடும்
இருகரம் பிரிந்தோரும்

குழந்தை அழுகையும்
குயில் பாட்டும் கேளாரும்
இருளுக்கு விலை போன
இரு விழி கொண்டோரும்

இதயத்தில் மனிதம்
மரணித்து மானிடர் முன்
மண்டியிட்டு மடியாதீர்
இமயம் தொட வினைந்தனரே

ஏழ்மை இடரல்ல
இமயம் பெரிதல்ல
உறுதியே உன் சுவாசமெனில்
லட்சியம் இறப்பதல்ல

நாளைய சந்ததிக்காய்
நான்கெழுத்துச் செய்தாலும்
நாயகன் கண்களுக்கு
நீயும் படைப்பவனே

உயிர் செய்த எழுத்தினை
உலகோடு சேர்ந்திட
முயற்சி எனும் வில்லெடுத்து
அறிவெனும் அம்பெய்து
சில்லறைக்கு தலைவணங்கும் - உலகை
கல்லறைக்கு அனுப்பிவிடு

சிறகிழந்த கிளிகளாய் - நீ
சிறை செய்த லட்சியத்தை
நம்பிக்கை சிறகடித்து
நடுவானில் பறக்க விடு

# ஒருவேளை சிரிப்பில்

செங்கல்லால் பல் வைத்து
சிரட்டைக்கரி மீசை கொண்டு
வெண்கட்டி விழி உருட்டி
கருஞ் சுருட்டு விரல் பிடித்து

காக்கையின் கருணையால்
முகமெல்லாம் பொட்டு வைத்து
பச்சைநிற கம்பளி மேல்
வீற்றிருந்தார் விரத்தி அண்ணா

வரம்பிலே வழி செய்து
நீர் திருப்பும் நெஞ்சத்துள்
நீரிலிட்ட நெல்லிலே
சப்பி ஆனது கடன் நினைவு.

வரவையின் வரவிலே
வாழும் வயிறுக்கு
வஞ்சம் செய்ததோ
மாரியில் வந்த மழை.

கூழ் குடிக்க நேரமின்றி
ஏர் பிடித்து நிலம் உழுதும்
சுற்றி வரும் செக்கு மாடாய்
நின்ற இடம் நின்றோமே

நாரை நிற ஆடை கட்டி
நெல்லு மணி பல்சிரித்து
நட்ட ஈடு தருவதாக
நண்டு பிடித்து போனார்கள்

மறுபோகம் வரும் போதும்
ஒரு பெயரும் வரவில்லை
மண்புழு உதவி கூட
மனிதரிடம் கிடைக்கவில்லை

நெல்பட்டு தோல் அரிக்கும்
நெஞ்சத்தை கடன் எரிக்கும்
வெட்டுக்கிளி கூட்டமெல்லாம்
திட்டம் போட்டு காத்திருக்கும்

நாட்டுக்கே சோறு போட்டும்
நல்ல தூக்கம் கொண்டதில்லை
தலை கோதி தட்டி விட
தென்றல் விட்டால் யாருமில்லை!

சொல்லும் நெல்லும்
இவ்வுலகை ஆள்வதெனில்
பல்லும் சோறும்
இல்லாது வளம் பெறுமா?

ஒரு வேளை சிரிப்பில்
பலயுக சந்தோசம்
வறுமை இல்லா
வீட்டில் குடிவருமா?

வாடாது என் குடும்பம்
வையத்துள் தாம் வாழ
வைக்கோல் கூரை என
வரும் துன்பம் சுமப்பேனே.

வயல் காற்று பட்டும்
வாடும் முகம் காணாயோ
வயலே உன் வசந்தத்தை
எம் வாழ்வில் தாராயோ?

சிறுபிள்ளை சிரிப்பாக
குலுங்கி நிற்கும் நெல்மணியே
நாலாம் நாள் அறுவடையில்
நல்ல செய்தி தருவாயோ?

# துயிலும் உள்ளம்

தித்திக்கும் தேன்
அத்தனையும் உள்வைத்து
வஞ்சிக்க நினைக்கும்
வண்டுகளால் அகம்மறைத்து
சுற்றிவரும் தென்றலில் தூதுவிட்டு
கெஞ்சித் தவமிருந்தாள்
ஆதவன் தன்னை அணைப்பானென்று

பகலவன் ஒளியினை களவாடி
காதலர் தேசத்தில் காவலிருப்பவள்
கதிரவன் காண
ஓடி ஒளிகிறாள்
மாலை வருவதாய்
உறுதி உரைக்கிறாள்

மதியின் புதிரோடு
மலரும் அரும்பினை
ஆடவன் ஒருவன்
அகம் கொள்கிறான்
முள்ளின் நடுவில்
முகம் மலர்ந்த புஷ்பத்தை
எண்ணி பார்க்கிறான்

வஞ்சியர் நெஞ்சத்துள்
வாடாமல் வாழ
உன்னை மிஞ்சியது
எது இவ்வையத்துள்

வா வைக்கிறேன்
அவள் உள்ளத்துள்
என்னையும் உன்னோடு
ஏந்திசெல் அவள் எண்ணத்துள்
கிள்ளிய மலர் எடுத்து
அல்லியின் முகம் பார்த்து

வள்ளியே மலர்சூட்டு - வா
சுவாசிப்போம் காதல் காற்றென
கனிமொழி பேசி
காளையவன் உருகிநிற்க

புஸ்பத்தை கண்டவள்
புன்னகைத்தாள்
நாணத்தை ஏனோ
நழுவவிட்டாள்

இருகை ஏந்தி
மலர் எடுத்து
இதய கல்லறைக்கு
பூஜித்தாள்

வியந்தவன் சூரிய பார்வையில்
கேள்விக்குறி சமைத்தான்
சுந்தரி ஏனோ
மெல்லமாய் புன்னகைத்தாள்

எண்ணத்துள் உன்னைப்போல்
எத்தனை ஆண்களடா
என்பது போல்
விழியால் பதிலளித்தாள்

ஆத்திரம் உற்றவன்
அண்மித்து பார்த்தான் - ஆம்
அது ஒருகால் இழந்தவளின்
காதலர் துயிலும் உள்ளம்

●

# இறைவா சாபமிடு

இரு தமக்கை தாய் என  ஒரு சிறு கூடு
வறுமை மட்டுமே உறவு கொண்டான் எம்மோடு
மூவரும் படித்தோம் பொறுப்போடு - அதிலும்
மனோ வெற்றி பெற்றேன் அகில இலங்கையோடு

பள்ளிகள் பல பாராட்ட
மேடைகள் எங்கும் மாலையிட
முதலாமவனாய் உலா வந்தேன்
ஆசான்கள் பலர் ஆசி கூற

தனித்த எம் தாயவள்
உழைத்த துயரமோ!
அட்டைக்குள் ரத்தம் சிந்தும்
அத்தனை கொடூரம் ஐயா!

இணைந்தனர் நண்பர்கள் அன்போடு
உணர்த்தினர் வறுமையை பண்போடு
சென்றது என் மனம் அவரோடு
சிதைந்தது கல்வி எனும் பண்பாடு!

ஈன்றவள் எனை உயர்த்த
பட்டாள் பெரும் பாடு
நானோ அடி புதைத்தேன்
பட்டண மோகத்தோடு

என்னாலே ஆனது
தாய் மனம் சுடுகாடு
இனி வாழ தகுதி இல்லை
இறைவா எனக்கு சாபமிடு

ஈன்ற பொழுதில் பெரிதுவக்கும் தன் மகனை
சான்றோன் என கேட்ட தாய்
தரமுளதோ எனக்கு இவ்வரி கேட்க
இவ் உலகில் என்ன செய்தேன் என் தாய் உவக்க

# பொறுமையுடன் ஓருநாள்

இரு விழி கோர்த்து
மறு முனை எனை பார்த்து
இரு இதழ் புன்னைகைத்து
ஒரு வரி கவி தந்தாள்

மூன்றாம் பிறையும்
ராமனின் வில்லும்
அர்ச்சுணன் அம்பும்
சிப்பியில் சிறை எடுத்த முத்தும்
சுதந்திர கிளிகளின் சொண்டும்
சுவாச காற்றுடன்
சுகம் பேசும் கரியவளும்

நெற்றி, புருவம், கூர்விழி
பற்கள், தேனிதழும் கூந்தலென
ஆட்சி புரிந்தன அவள் மதி முகத்தை
காளை என் மனம் கவர்ந்தது - அவளை
காதல் செய்ய முனைந்தது

காமதேவனின் தூது வந்தது - எம்முள்
காதல் எனும் உறவு பிறந்தது
பஞ்சபூதமும் எம்மில் பகைவுற்றது
அதை மிஞ்சும் எம் காதல் வலுவுற்றது
கடமை என்றொரு கடன் இருந்தது - இதற்கு
இடைவேளை கேட்டு எம் கரம் பிரிந்தது

ஆண்டவன் நாடகம் அரங்கேரியது
அலறிய தொலைபேசி அல்லல் சொன்னது
மாற்றானாய் என்னவளை காவு கொண்டது
ஆழிப்பேரலை எனும் அரக்கன் என்றது
(கயல்விழிகளின் கண்ணீரே கடல் நீர் கைக்கின்றது)

சிறகடித்த சிந்தை சிதறியது
இருதய கோயிலோ இருளானது
மரணம் என்றொரு அடி எடுத்தது -மங்கை
குரல் மணி ஒலித்தது

காதலராய் நாம் பேசிய சரத்து
கலைஞனாய் உலகில் தலை நிமிர்த்து
உனை தேடி வரும் நல்வாழ்த்து
எனக்கும் சாந்தி நீ தந்து
சாந்தம்கொள் நம் காதல் நினைத்து

கலை உலகில் வைத்தேன் அடி எடுத்து
கனிவான பலவற்றை நான் படைத்து
வெற்றி எனும் மலர்களால் சரம் தொடுத்து - மகிழ்வேன்
காதலர்தினமே உனக்கு சமர்ப்பித்து

●

# வீர வணக்கம்

விறகாகும் உடலுக்கு
விடை தேடி வழி நடக்க
தோளேந்தி கொண்டதுவோ
காலென செய்த கட்டை

இரு கால் இருப்போரே
முடங்கிக் கிடக்கையிலே
காலின்றி கோலூன்றி
இமயம் கடப்போரே

மழை, அலை, குயில், குருவி
பார்த்ததுண்டு கேட்டதில்லை
சிரித்ததுண்டு சிநேகம் இல்லை
எம்மொழி ஏனோ
இறைவனுக்கும் புரிவதில்லை
இவர் மொழி ஏனோ
இதுவரை கேட்டதில்லை.

விழியிலே செவி வைத்து
விரலெனும் நாவசைத்து
உள்ள கரு சொல்ல
உதடின்றி மொழிபேசி
செவி நா கொண்டும்
சிறப்பின்றி வாழ்பவருள்
தனி அடி நடந்து
தாய் மொழி வெல்வாரே

பத்துவிரல் கண் அசைத்து
மனத்திரையில் திரையிட்டு
அசைந்தாடும் கலைஞர்களே

இருளோடு செய்தீரோ
இரகசிய திருமணம்
இதனால் காணீரோ
இது வரை உம்முகம்

இரு கண் இருந்தும்
இருள் வாடும் மானிடருள்
இனிவாழ ஆசானாய்
போதனை புரிவாரோ

உரமில்லா நெஞ்சம் கொண்டு
ஊன் என மடியாது
ஊனம் கால் மிதித்து
வீரம் கைபிடித்து
வெற்றி நடை பயில்வோரே
உமக்கே உரியதே
எம் வீர வணக்கங்கள்

●

# கலங்கி நில்லாரோ?

திரவ நிலை உதிரமதில்,
கலந்ததுன் நாமமடி
பருவமெய்த யாக்கை தன்னில்
படிந்தது உந்தன் வதனமடி

சிந்தும் வியர்வையும்
தேடும் சொர்க்கமெது?
மலரது மண்டியிட்டு
மண்றாடி கேட்கும்
மங்கையே உந்தன்
மரகதப் பாதமது.

பூந்தென்றல் பூவோடு
புன்னகைத்தல் புதிதல்,
ஏந்திலையை இடற செய்யும்,
குறும்பு தானடி

குதூகலம் கொள்ள செய்யும்,
கருமையின் புன்முறுவல்
கண்டு வியந்தேனடி - அது
வளியுடன் விளையாடி
வதனத்தில் வம்பு செய்யும்,
இடைநீள் குழலடி.!

வளரும் பிறையை வதனத்தில் சூடி,
பவளத்தால் மலர் சமைத்து
நாவின் முன்னிறுத்தி,
கிளிச்சொண்டில் தேன் குலைத்து
இதழென நீ இருத்த,

அர்ச்சுணன் அம்பெடுத்து
மதனின் மாலையிட்டு
கயல்விழி மின்னி மின்னி,
ஒளிர நிகர் மின்மினி

மொழியிலா கொள்ளழகை
மேனியெங்கும் ஏந்தி கொண்டு,
புவியிலே மின்னலாய்
மங்கை நீ மலர்கையிலே,

தேவரும் என்னடி
திகைத்திடாரோ !
உன் தேகம் கண்டு
காளையரும்
தான் கலங்கி நில்லாரோ?

•

# இறைமனம் என்ன செய்யும்?

கதிரவன்
தன் கெட்டித்தனத்தை
கொட்டி எறிந்தான்
சுட்டுக் கொதித்தாலும்
பற்றி எரியாத கற்பாறையாய்

பஞ்சு மெத்தைமேல்
கொஞ்சி உலாவரவேண்டிய
பிஞ்சு கால்கள்ரெண்டு
பயின்ற நடைதனை
அரங்கேற்றம் செய்தது

எண்ணத்தில் என்ன திண்ணம்
அவன் கன்னத்தில் தெரிந்தது
பிறந்திருக்கு எண்ணம்
புன்னகை மலர் பூத்த வண்ணம்

அணியும் மனமும்
வெள்ளை நிறமுடன்
பிள்ளைக் குழுவுடன்
பள்ளியை நாடவேண்டிய வயதிலோ

கால் துவக்கம் தலைமயிர் வரை
வீதிக்கேற்ற வர்ணமாம்
அது தான் கருமை
அது இருளாச்சே

எவ்வாறு இவனை புடை சூழ்ந்தது
மறுமொழியை மையமாய் கொண்டு
முதலாம் அத்தியாயத்தினை
முகர்ந்து பார்க்கிறான்

அன்பையும் பண்பையும்
அம்மை, அப்பனாய்
ஈன்றோர் செலுத்தினர் அப்பொழுதில்

சிலநாள் போதையால்
சீமான்கள் மேடையில்
செல்லா காசான தகப்பனுக்கு
கௌரவம் தொலைத்த கவரிமான்
என்ற காரணம் இருந்தது
தினம் குடிப்பதற்கு

வறுமை மேடையில் - தாயின்
மௌன நாடகம்
போதை ஓலத்தில் - தந்தையின்
உக்கிர தாண்டவம்

அதனிடை அரங்கேற முனையும்
சீமான்களின் சில்மிஷ நாட்டியம்

ஈரெழுத்து பெயர் கேட்டு
இவ்வுலகில் வாழ
துணியுமோ தமிழர் உள்ளம்

ஆகாரம் சரிசெய்ய
ஆதாரம் தேடி தென்பட்டது
வெளிநாட்டு எண்ணம்

சேலை தலைப்பில்
சாயம் இருக்காது - தன் பிள்ளை
தலை துடைக்கும்
பாகம் அது

பாவாடை தலைப்பில்
நாடா இருக்காது
கூடைக்கு கயிறுவாங்க
காசு ஏது

உயிர் என்ற உறவுகளை
உள்ள சுவடேந்தி
இதழால் விடைபெற்று
விழியால் அழைத்து
உடையாய் சுமந்து சென்றாள்
சென்றது உடல் அல்ல
அங்கு அவள் உயிரும்

புத்துயிர் கொள்ள
புறநாடு சென்று
தசை புசிக்கும் பேய்களுக்கு
இரையாகி பிணமான
அவளின் பிள்ளை என்செய்யும்?

புரியாது அருந்திய
தந்தையின் போதை
புற்றுநோய் அன்று
என்செய்யும்?

எண்ணையும் திரியும்
இல்லாத விளக்கு
என்செய்யும்?

மொத்தமும் செய்த
இறைமனம் இவனுக்கு
இனி என்ன செய்யும்?

# மொழி பேசும் இமைகள்

சிறகடித்த இதயங்கள்
சிறையெடுத்து கொண்டன
திருமண அழைப்பில்
முத்திரையிட்ட வேளையில்
வரமென நினைத்த நெஞ்சத்துள்
வரதட்சணை என்பது புரியவில்லை

பட்டினி தேசத்தின் பாவையிவள்
புன்னகை தேசத்தின் புஷ்பமிவள்
கண்ணீர் தேசத்தின் காட்சியிவள்
கருணை தேசத்தின் சாட்சியிவள்

காலனின் மேடையில்
காதலெனும் நடனத்தில்
சங்கமம் செய்கிறாள்
காமதேவன் ஆசியுடன்
இவள் அவன் கரம்பிடித்து
இல்லறம் பதிக்கிறாள்

மணமேடை முழுதும்
மௌனித்த மாமி
முதலாரம் இட்டது- இவள்
அரக்கி எனும் அரவணைப்போடு

புரிந்தவள் புரியாததாய்
புகுந்து கொண்டாள் இல்லத்துள்
அறியாததை அறிய
முனைந்திட்டாள் மனதுக்குள்

சீதனம் என்ற சிறப்பு விருந்தினர்
பங்கேட்கவில்லையே
பாவம் என்மகன்
நாளைய நாளுக்கு என்செய்வானோ
நிகரில்லா மகனுக்காய்
ஏங்கும் தாய் மனம்

கடவுள் என ஆனவனை - கலையுமோ
தமிழர் தாலியின் தன்மானம்

சேவல் கூவியது கேட்குதோ
செவிடாடி உனக்கு
கனிச்சொல் ஓதி - அவனை
கிடத்தியது போதும்
கடந்து வந்த பாத்திரத்தை துளக்கு

இனிமை பறித்து இழிவு படுத்த
ஒரு துணிகூட இல்லாமல் வந்தவளே
உத்தமன் என் மகனை வித்தகனாக்கி
எத்தனை கனவு கண்டேனடி
அத்தனையும் கொன்றாயடி

பஞ்சிலே நடந்திருப்பான்
பாதணி எதற்கடி
முள்ளாய் நீ வந்து- அவன்
முகவரி மறைத்தாயே

அன்பான குடும்பத்தில்
பண்பாக பிறந்தவளோ
அன்னையும் அறிவாளோ
உன் அத்திவாரம்

எத்தனையோ என்றால்
எப்படி தெரியும்
நூலை போல சேலைனு
சும்மாவா சொன்னாங்க

கொண்டவன் பாதத்தை
கண்டெழுந்தவள்
கூவிய மாமியின்
குணமுணர்ந்தாள்
விளங்காமல் எழுந்து
வினைசெய்தாற் போல்
பாசாங்கு செய்தாலும்
பக்குவமில்லை மனதுக்கு

நாழிகையால் நாள்,
வாரம், மாதம், வருடமாகிறது
அன்பனின் அன்னையின்
நா ஒலி குறைகிறது

மரண படுக்கை எனும்
மறுவாசல் நுழைகிறது - அதுதன்
தாயின் முகமாய் மிளிர்கிறது
சேய்போல் ஆதரிக்க
இதயம் நடக்கிறது

இருக்கும் தசையில்
எலும்பை காத்துக்கொண்டு - தன்
கடமைகள் அனைத்தையும்
கட்டிலுக்குள் வெற்றி கொண்டு
மலர் வாசம் மாறி
மல சுவாசம் கொண்டது
மாமி ஜடம்

கருணை உள்ளம்
காணுமோ அதனை
இருகை ஏந்தி
நீராட்டி சோறூட்டி
மனிதம் உணர்த்தி
புன்னகை செய்கிறது

பத்தினி பார்த்து திட்டிய நாக்கு
கட்டி அணைத்து கதற நினைத்தாலும்
தொட்டில் குழந்தையாய்
கட்டிலில் கிடப்பவளின்
உரமில்லா உதட்டுக்காய்
மொழிபேசும் இமைகள் துடித்தது

மறுஜென்மம் எனக்கு
மாதாவாய் நீ வேண்டும்
கைமாறு செய்யவென
கரம்பிடித்த ஆவி
கண்ணீர் மலர் தொடுத்து
பாதபூஜை செய்தாற் போல்
பயணித்து சென்றது

●

# இன்னல் துடைப்பாயா?

சுதந்திர காற்றை சுவாசிப்பாயா
சங்கடம் என்று சரிந்து கிடப்பாயா
முள்வேலி கண்டு முடங்கி விடுவாயா
முள்ளும் பசுமை என எழுந்து நடப்பாயா

கயவர்கள் கண்டு களைத்துவிடுவாயா
காரணம் கேட்டு காலம் வெல்வாயா
மாயவன் சூழ்ச்சியில் மயங்கி விடுவாயா
மதிகொண்டு நீ பதிலடி கொடுப்பாயா

ஏமாற்றம் கண்டு ஏங்கி விடுவாயா
உனைமாற்றி கொண்டு உலகம் வெல்வாயா
பாமரன் என்று பாதம் கிடப்பாயா
தன்மானம் கொண்டு தலை நிமிர்வாயா

ஏணியாய் இருந்து கூனி விடுவாயா
ஏணியில் நடந்து இமயம் தொடுவாயா
பொய்யான புலமைக்கு புகழ் சூட்டுவாயா
புதுமை கவிதனை நீ படைப்பாயா

தமிழர் வீரம் உயிர்கொள்வாயா
தரணியில் உரிமை நீ வெல்வாயா
இருதயம் உறுதி பூண்டு இன்னல் துடைப்பாயா
மறத் தமிழன் என்று மகிழ்ச்சி தருவாயா

காற்றுக்கு ஏனடா கவசம்
சாதிக்கத்தானே சரீரம்

●

ஞானா.மருதமுத்து

# மரண முள்

சதையால் பிணைந்த - நீ
ஜகத்தில் பிறக்கையிலே
சாவை நினைத்துத்தான்
சத்தமிட்டு அழுதாயோ

விந்தை பிறவியின்
விளையாட்டு புரிகிறதா - அவன்
விளையாடும் நேரம்
அகம் மறைத்தான் தெரிகிறதா?

நம் ஆயுள் அளக்கவே
இதயம் எனும் கடிகாரம்
அவன் ஆட்டி அடக்கவே
சுவாசம் என்னும் மின்சாரம்.

ஒரு சாண் தொலைவில் செவி இருந்தும்
உள்ளம் துடிப்பதை கேட்டோமா ?
நாசிக்கு மேலே விழியிருந்தும் - நாம்
சுவாசம் கொள்வதை பார்த்தோமா ?

பலனின்றி புலன் தந்து
பொம்மையாக்கி மகிழ்பவனை
புத்தி கொண்ட மானிடன்
வெற்றி கொள்ள முனைந்திட்டான்.

தொட்டில் தொட்டு புதையும் வரையில்
புலப்படாத காலம் பொன்னானது
கட்டிலில் கிடந்து கட்டை என புதையாது
காலத்தை வெல்வதே சாதனை என்பது.

நிழலை மிதித்து நேரம் கணித்து
நிலவிலும் நடந்து மனிதன் செல்கிறான்.
மனித கூட்டுக்குள் மணிக்கூடு மறைத்து
மரணமுள் அசைத்து மகிழ்ந்தவன் வியக்கின்றான்

எத்தனை உயிர் நீ காவு கொண்டாலும்
உறங்காத விழிகள் சிகரம் தாண்டாது
விதைத்தே புதையும் மனித இனம் - என
காலனின் கைகளிலே கடிகாரம் பரிசளித்தான்.

# மரண சான்றிதழ்

வெவ்வேறு கிராமத்தில்
வேரறுத்த வெள்ளையன்
மாற்றான் தேசத்தில்
மலையூர் சிறையில்
இந்திய அடிமைகள் என்றெமக்கு
ஆயுள் தண்டனை தீர்ப்பளித்தான்

தேயிலையில் மாசி தேடி
தென்னகத்தில் இருந்து வந்தோம்
பஞ்சம் பிழைக்கவந்து
பரதேசி ஆகிப்போனோம்

இல்லை என்பதுவே
எம் வாழ்க்கை ஆனதுவே
இருளுடன் மட்டுமே
எம் உறவு இருந்ததுவே

உணர்ந்த சில உள்ளங்கள்
உரிமை எனும் குரல் தொடுத்து
நாளைய சந்ததிக்காய்
நாட்டுரிமை வென்றதுவே

வென்றெடுத்த தலைவர்க்கு
வீர வணக்கங்கள்
கூன் ஆன இன்றவர்க்கு
வீணே ஏன் மீசைகள்

கருத்தடை என்பது
விருப்பத்தில் ஒன்றுதான்
கட்டாயம் கலைவதற்கு
மலையூரான் என்ன களைகளா?

கருவறையே கல்லறையாய்
நடமாடும் புதைகுழியாய்
பாமர காரணத்தால் பசுமை
பறிக்கப்பட்ட பாலை வனங்களாய்

ஊனும் உழைப்பும் உரத்துக்கே - அன்றில்
விருத்திக்கு இல்லையென
கரியாகும் திரியான
தேயிலை தேசப் பெண்கள் - இந்த
தேசத்தின் மெழுகுவர்த்திகள்

சௌமிய மொழி பேசி
சாகசம் புரிவோரே!
கணபதி துணையோடு
கர்ஜிக்க முனைவோரே!
வக்கீலும் உடன் கூட்டி
வாதாட வந்தோரே!
இன்னல் துடைப்போமென
மின்னலாய் முழங்குவோரே!

கூறுங்கள்...
விதைக்காத நெல்லுக்கு
வேலி எதற்கையா?
விளங்க முடியாத
உங்கள் மௌனங்கள்
எழுத்தில் வடிக்காத
மலையகத்தின்
மரண சான்றிதழா?

●

*With Best Compliments From*

# ROLEX HOTEL

(SINCE 1982)

380, Galle Roa, Wellawatta, Colombo 06
Tel: 0112 360 462

340, Hospital Road, Jaffna
Tel: 021 222 2805

E-mail: rolex.hotel@yahoo.com

*With Best Compliments From*

# HOTEL KATPAHAM

**VEG & NON-VEG MEALS**

**(Special Palmyra Foods)**

244, Galle Road, Colombo 04

Hotline : 0777 253 157 / 0112 362 456



நண்பர் தங்கையா மருதமுத்துவின் கன்னி முயற்சியாக இத்தொகுப்பு அமைந்துள்ளது. அவரது உணர்வுகளும் சமூகப் பார்வையும் காண விரும்பும் புதிய உலகமும் வார்த்தைகளாக வெளிப்பட்டு நிற்கின்றன.

*முன்னுரையில்...*
**ம. சண்முகநாதன்** - உதவிப் பணிப்பாளர்,
இந்து சமய கலாச்சார அலுவல்கள் திணைக்களம்

சமுதாய உணர்வோடு தான் வாழ்ந்த சமூகத்தைப் பல கேள்விகள் கேட்கும் ஆதங்கங்களாகவும் உரிமையோடு வாழத் துடிக்கும் மானுடத்தின் குரலாகவும், மொழி-இனக்காப்புக் கோசங்களாகவும் விடுதலைக் கீதங்களாகவும் மருதமுத்துவின் கவிதைகள் காணப்படுகின்றன.

*சிறப்புரையில்...*
**மார்க்கண்டன் ரூபவதனன்** -
விரிவுரையாளர், ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகம்

கவிதை பற்றி வலிந்து திணிக்கப்படும் மனப்பதிவுகளையும், கவிதையின் உயிரைத் தொந்தரவு செய்யும் தேவையற்ற அலங்காரங்களையும் தாண்டி அற்புதமான கவிதைகளைப் படைக்கவல்லவராகத் தெரிகிறார் தங்கையா மருதமுத்து.

*அணிந்துரையில்...*
**மு. மயூரன்**
இலக்கியச் செயலாளர், தேசிய கலை இலக்கியப் பேரவை

தானா. மருதமுத்து கடந்து வந்த வாழ்க்கை கசப்பானது. அதனை அவர் சொல்லும் விதம் சுவாரஸ்யமானது. ஒரு படைப்பாளியாக தன்னை வெளிக்காட்டும் தானா. மருதமுத்து ஒரு நாள் தன்னுடைய வாழ்க்கை அனுபவங்களைத் தழுவிய சிறுகதையோ நாவலோ அல்லது சுயசரிதையோ கூட எழுதலாம். அப்போது இன்று "சிறகிழந்த கிளிகள்" எனும் அவரது இந்தப் படைப்பு வெளிவந்திருக்க வேண்டிய நியாயப்பாடுகள் புலப்படும் என எண்ணுகிறேன்.

பதிப்புரையில்...
**'மல்லியப்புசந்தி' திலகர்**
பாக்யா பதிப்பகம்

பாக்யா
பதிப்பகம்

ISBN 9789551805074
9 789551 805074

Rs.200/-